TNPSC LEADERS ACADEMY

## GR I, II & IV

# PRELIMS SCORING GUIDE

PREPARED BY

*EXPERT TEAM OF TNPSC LEADERS*

8248270571

Channel name - tnpscleadersacademy

# TNPSC
# இந்த 3 இருந்தால் PASS

**Knowledge / அறிவு**

*40%* புத்தகத்தில் இருந்து கற்றுக்கொள்ளலாம்

**Skill Set / திறன் தொகுப்பு**

தேர்வை அணுகும் மதி நுட்பம்

**Avoiding Mistakes / தவறுகளைத் தவிர்ப்பது**

20 % தவறை தவிர்த்தல் பயிற்சி

TNPSC LEADERS ACADEMY

Online Institute for TNPSC Exams


அரசு வேலை ஏன் வேண்டும் .......... 2

டி என்பிஎஸ்சி தேர்வு பற்றி உங்களின் எண்ணம் மாற வேண்டும் .......... 6

டி என்பிஎஸ்சி மாணவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன? .......... 10

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் அன்றும் இன்றும் .......... 13

குரூப் 4 குரூப் 2 குரூப் 1 ஆகிய தேர்வுகள் வேறு வேறா ஒன்றா ? .......... 18

நாம் பார்க்க போகும் வேலைக்கு நாம் தேர்வினில் படித்த பாடத்திற்கும் என்ன சம்பந்தம் .......... 22

நாம் பார்க்க போகும் வேலைக்கு நாம் தேர்வினில் படித்த பாடத்திற்கும் என்ன சம்பந்தம் (இரண்டாம் பிரிவு) .......... 25

தேர்வில் எளிதாக வெற்றி பெறும் கணக்கு .......... 30

தேர்வில் வெற்றி பெற எது முக்கியம் .......... 35

எச்சரிக்கை பக்கங்கள்-1 .......... 38

எச்சரிக்கை பக்கங்கள்-2 .......... 41

முக்கோண பயிற்சியின் முக்கியத்துவம் .......... 43

புரிந்து கொள்ள ! அறிந்து கொள்ள ! தெரிந்து கொள்ள ! தெளிவு அடைய ! .......... 48

அப்ப டி என்பிஎஸ்சி யில் வெற்றி பெற என்ன தான் செய்ய வேண்டும் .......... 53

அப்ப டி என்பிஎஸ்சி யில் வெற்றி பெற என்ன தான் செய்ய வேண்டும் (PART -2 ) .......... 56

வெற்றியின் கதையினை நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ள .......... 58

# அரசு வேலை ஏன் வேண்டும்

நீங்கள் சிறுவயதின் முதலே இந்த வாக்கியத்தை கேள்விப்பட்டிருக்கலாம். *"**கால் காசு என்றாலும் கவர்மெண்டு காசு சம்பாதிக்கிற மாதிரி வருமா**"* . இது இன்றளவும் தமிழகம் முழுவதும் இந்தியா முழுவதும் பேசப்பட்டு வருகின்ற ஒரு வாக்கியமாக இருந்து வருகிறது.

உலகிலேயே அதிக நபர்கள் தேர்வு எழுதும் ஒரு தேர்வாக தமிழ்நாடு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் தொகுதி 4 என்றால்.... உங்கள் பலருக்கும் இது ஆச்சரியமாகத்தான் இருக்கும்

அரசு வேலைக்கும் அரசு அல்லாத பிற வேலைகளும்

**உதாரணமாக**

1. தனியார் நிறுவனங்கள்,
2. அந்நிய தனியார் நிறுவனங்கள் சுயமாக வேலை பார்ப்பவர்கள் என அனைவரும் அரசு அல்லாத பிற வேலைகளில் சேர்வர்

அரசுப் பணி என்றால்...

- நிரந்தரமான வேலை உண்டு
- மாதம் அரசாங்க சம்பளம் உண்டு என்பது அனைவருக்கும் தெரிந்தது. ஆனால், அரசு பணியில் வேறென்ன சிறப்பு அம்சங்கள் உள்ளன என்பதை பற்றி நாம் பார்க்க இன்றைய
- தனியார் வேலை வாய்ப்புகளில் உள்ள இடர்களையும்
- வேலை வாய்ப்பு இன்மையும்
- முறைசாரா நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களின் நிலையையும்

அறிந்து கொண்டாலே அரசு பணியில் என்னென்ன சிறப்பு சலுகைகள் அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன என்பது தெள்ளத் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்

இந்த பகுதியின் நோக்கம் அரசு பணியின் சிறப்பினை எடுத்துச் சொல்வதற்கு அல்ல!
சிறப்பு பெற்ற அரசு பணி உங்களுக்கு வேண்டும் என்று நினைத்து தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருப்பீர்கள் என்றால்....

இத்தகைய பணியினை பெற நீங்கள் தற்போது உழைத்துக் கொண்டிருக்கும் சதவீதத்தில் ஒரு ஐந்து சதவீதம் கூடுதலாக உங்கள் உழைப்பினை செலுத்தினாலும் அது எங்கள் முயற்சிக்கு கிடைத்த பரிசாகவே எண்ணிக் கொள்வோம்

ஆங்கிலத்தில் ஓர் வரி உண்டு '*நோ பெயின் நோ கெயின் NO PAIN NO GAIN*'

**அரசு அல்லாத வேலை வாய்ப்புகளில் உள்ள சில இடையூறுகளாக கருதப்படுவன**

1. நிரந்தரம் இல்லாத பணி
2. சம்பளத்தில் மாத வருமானத்தில் ஏற்றத்தாழ்வு
3. பொருளாதாரத்தில் நிலவும் பணவீக்கத்தினை ஈடு செய்யும் எந்த விதமான வருமான வளர்ச்சியும் இல்லாத தேக்கம்
4. இதுதான் வேலை நேரம் என சொல்ல முடியாதபடி 24 மணி நேரமும் வேலையில் இருக்க வேண்டிய சூழ்நிலை
5. சமூக பாதுகாப்பில் மற்றும் குடும்ப பாதுகாப்பில் போதுமான அக்கறை காட்டாத சட்டங்கள
6. வேலை நேரம் போக மீதம் இருக்கும் நேரத்தில் தன் குடும்பத்தினை பேணிப் பாதுகாக்கும் நேரம் இல்லாமல் இருத்தல்
7. எப்பொழுதும் முதலாளியின் அல்லது உயர் அதிகாரியின் கனிவான பேச்சுக்கும் அரசனைக்கும் எதிர்பார்த்து இருக்கும் நிலை
8. வேலையில் ஏதாவது சிக்கல் என்றால் சட்டத்தின் உதவியை நாட முடியாத நிலைமை

***நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் வழியில் சொல்வது என்றால்....***

*பன்னாட்டு நிறுவனங்களிலும் உயர்ந்த மென்பொருள் நிறுவனங்களிலும் பணியாற்றி வந்திருந்த பல பணியாளர்களை உலகப் பொருளாதார மந்த நிலையை காரணம் காட்டியும் மற்றும் உலகப் பொருளாதார சூழ்நிலை காரணமாகவும் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி பணியிலிருந்து நீக்கிய தரவுகளைப் பற்றி நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் ஆக இத்துணை இடர்பாடுகளையும் சந்தித்து ஒரு ஆணோ பெண்ணோ ஒரு நிறுவனத்தில் பணியாளர்களாக இருப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல*

அரசு பணி என்பது மேல் சொன்ன அனைத்து இடர்பாடுகளுக்கும் இன்றி ஒரு ஆணையோ ஒரு பெண்ணையோ நிம்மதியாக வாழவைக்கும் ஒரு பணி என்பது நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள்

**இப்போது நாம் அரசு பணியில் உள்ள சில நல்ல விஷயங்களை பற்றி பார்ப்போம்**

1. பணி பாதுகாப்பு
2. பணியின் கால அளவு காலை முதல் மாலை வரை எவ்வளவு நேரம் என்பதும்
3. பணியின் நேரத்தின் போது தேனீர் அருந்துவதற்கான காலமும்
4. மதிய உணவு எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய காலமும் வரையறுக்கப்பட்டுள்ளது
5. ஒரு மாதம் வேலை செய்து முடிக்கும் போது அம்மாதத்தின் கடைசி நாளில் நம் சம்பளமாக நம் கணக்கில் அரசு மூலம் வருவாய் மாற்றப்படுகிறது

*(அம் மாதத்தின் கடைசி நாள் அரசு விடுமுறை நாட்களாக இருக்கும் பட்சத்தில் அந்நாளுக்கு முன் தினமே நம் சம்பளம் நமது அரசால் நமது கணக்கிற்கு மாற்றம் செய்யப்படுகிறது உத்தரவாதமாக சம்பளம் நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஒரு பணியாளனுக்கு இந்த முறை உறுதி அளிக்கிறது)*

1. அரசு பணியில் சேர்ந்த பின்பு அந்த பணியாளருக்கு மட்டுமே சலுகைகள் என்பது அல்ல ஓர் அரசு ஊழியர் எதிர்பாராத காரணங்களுக்காக இறக்கும் வேளையில் அவரது குடும்பத்தை பாதுகாக்க அவரது குடும்பத்திற்கு அரசு பணி தரப்படும் வழக்கம் தமிழகத்தில் இருந்து வருகிறது
2. அரசு பணியில் இருக்கும் ஓர் பணியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் சமூக பாதுகாப்பு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது **உதாரணமாக** *புதிய மருத்துவ காப்பீடு திட்டத்தினை கூறலாம்.*

இப்போது நீங்கள் ஒன்றை தெளிவாக உணர்ந்து இருப்பீர்கள் அரசு பணியில் இருக்கும் சிறப்பு இயல்புகளை நீங்கள் உணர்ந்த பின்பு நீங்கள் படிக்கும் அளவினை விட ஒரு மணி நேரமோ இல்லை இரண்டு மணி நேரமோ கூடுதலாக நீங்கள் படித்தால் உங்கள் கனவுப் பணியான அரசுப் பணி உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

***மேலும் இந்த கையேடு மூலமாக உங்களுக்கு...***

- தமிழ்நாடு தேர்வாணையம் கடந்து வந்திருக்கும் பாதையும்
- அதில் நீங்கள் வெற்றியடைய.. என்ன? என்ன? செய்திருக்க வேண்டும் என்பதை பற்றியும் இனிவரும் பகுதிகளில் பார்ப்போம்

நாம் முன்பே இந்த பகுதியில் சொல்லியது போல உலகிலேயே அதிக நபர்களும் எழுதும் தேர்வாக தொகுதி 4 இருக்கிறது என்பதை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் இருந்தாலும் அதில் வெற்றி பெறும் நபர்களுக்கு மட்டும் தான் அரசு பணி வழங்கப்படுகிறது என்பதுதான் உண்மை.

1. வெற்றி பெற என்ன வேண்டும்?
2. வெற்றி பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?
3. வெற்றி பெற சுலபமான வழி என்ன?
4. என்பதை பற்றியும் இந்த புத்தகத்தின் மூலமாக உங்களுக்குச் சொல்ல ஆவலாய் உள்ளோம்

## டிஎன்பிஎஸ்சி தேர்வு பற்றி உங்களின் எண்ணம் மாற வேண்டும்

டிஎன்பிஎஸ்சி நடத்தும் தேர்வினை பற்றிய விழிப்புணர்வு- தேர்வு எழுதும் மாணவர்களுக்கு எந்தெந்த வகையில் வருகின்றன என்று ஆராய்ந்து பார்த்தோமேயானால் அது மூன்று வகையில் ஒரு மாணவ/மாணவியை வந்தடைகிறது

1. தன்னுடைய பெற்றோர்கள் மூலமாகவும்
2. தன்னுடைய ஆசிரியர் மூலமாகவும்
3. தன்னுடைய சக நண்பர்கள் மூலமாகவும் /சமூக வலைதளம் மூலமாகவும்
4. ஓர் மாணவனுக்கு/ மாணவிக்கு தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் தேர்வினை பற்றி ஓர் அறிமுகம் ஏற்படுகிறது.

தமிழ்நாடு தேர்வாணையம் ஒரு வருடத்திற்கு தோராயமாக 25 தேர்வுகளை நடத்தும் ஓர் தேர்வாணையமாக இருந்து வருகிறது. *இதில் தொகுதி 4 தொகுதி 2 தொகுதி 1 என சொல்லப்படும் தேர்வுகள் தான் மாணவர்கள் மத்தியில் பெரும் அளவு அறிமுகமாகி உள்ளது*

**முதலில் டிஎன்பிஎஸ்சி தேர்வு பற்றி பெற்றோர்களின் புரிதல்**

பள்ளி பாட புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். அதன் கேள்விகளுக்கு சரியாக பதில் எழுதினால் அரசு வேலை கிடைக்கும் என்ற பொதுவான புரிதல் தான் பெற்றோர்களிடம் உள்ளது.

ஆனால் டி என் பி எஸ் சி தேர்வு என்பது பல நிலைகளிலும் டிஎன்பிஎஸ்சி தேர்வுகள் ஒவ்வொரு தேர்விற்கும்

1. தான் கேள்வி கேட்கும் விதத்தையும்
2. கேள்விகளின் தன்மையையும்
3. கேள்விக்கு ஏற்ற விடை குறிப்புகளை கடினமாக்கியும்
4. கேள்விகளை கேட்கின்றன என்பது ***பெரும்பாலான பெற்றோர்களுக்கு தெரியாத ஒரு விடயம்.***

***இதில் ஆச்சரியம் என்னவென்றால் டிஎன்பிஎஸ்சி பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு ஒரு தேர்வினை வடிவமைக்கின்றன என்பது புரிதல் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு சரிவர சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை என்பதுதான் இதில் வேதனை தரும் விடயம்***

- 1970 இல் கேட்கப்பட்ட கேள்வியும்
- 2010 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட ஒரு கேள்வியும்
- 2022 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்வியும்

ஒரே தரத்திலோ ஒரே அளவிலோ ஒரே தன்மையிலோ இருந்தது அல்ல என்பது தான் வரலாற்று உண்மை

**டி என் பி எஸ் சி பற்றி ஆசிரியர்களின் புரிதல்**

பெரும்பாலான ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் போது டி என் பி எஸ் சி தேர்வு என்பது முக்கிய குறிப்புகளைக் கொண்டு எளிதாக வெற்றி பெற முடியும் என்பதே அவர்கள் சொல்லும் ஒரு யோசனை.

*(ஆனால் அந்த யோசனை 50 சதவீதம் மட்டுமே உண்மை என்பது அவர்கள் அறிந்திருக்காத ஒரு பகுதி.)*

ஏனென்றால் டிஎன்பிஎஸ்சி வழக்கமாக தன்னுடைய பாட திட்டங்களை மாற்றம் செய்து வந்து கொண்டே இருக்கின்றன இன்னும் தெளிவாக சொல்லப் போனால் டிஎன்பிஎஸ்சி 2020இல் புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் படுத்தியது.

*இந்த சிலபஸ் எதை ஒட்டியதாக இருக்கும் என்றால் அந்த வருடத்தில் தமிழக அரசு தங்களுடைய பள்ளிகளில் அறிமுகப்படுத்திய பாடத்திட்டத்தினை பொறுத்து.*

- அந்தக் கேள்விகளின் தன்மையும் மாறுபடும் என்பதுதான். அந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சொல்லாத ஓர் உண்மை.
- மேலும் Tnpsc ஆள் கேட்கப்படும் அனைத்து கேள்விகளும் பள்ளிப் பாட புத்தகத்தில் இருந்தே வருகின்றன என்று சொல்வதும் முழுவதுமாக உண்மையில்லை இதனை பற்றிய விரிவான பார்வையை பின்னொரு பகுதியில் பார்ப்போம்.

*(பள்ளி பாட புத்தகம் என்பது அடிப்படையான குறிப்புகள் கொண்ட புத்தகம் என்பதுதான் உண்மை அது மட்டுமே கேள்வியை எதிர்கொள்ளும் அனைத்தையும் தரவல்ல அட்சய பாத்திரம் அன்று.)*

**டிஎன்பிஎஸ்சி தேர்வினை பற்றி மாணவர்களுக்கு சமூக ஊடகமும் ஏற்படுத்தும் தாக்கம்**

டிஎன்பிஎஸ்சி தேர்வு என்பது பல்வேறு மாணவர்களால் பல்வேறு தரப்பட்ட வயது உடையவர்கள் எழுதப்படும் தேர்வு என்பது உங்களுக்கு தெரிந்தது எனவே ஒரு தேர்வில் வெற்றி பெறுபவர் சொல்லும் ஒரு செய்தியும் அதே தேர்வில் தோல்வியை சந்தித்த ஒரு தேர் வரும் சொல்லக்கூடிய விஷயம்.

ஏன் சமூக வலைதளத்தில் மாறுபட்ட கருத்துக்கள் உலா வருகின்றன என்பதை சிந்தித்துப் பார்த்தால் உங்களுக்கே அதற்கான காரணம் புலப்படும்.

**டி என் பி எஸ் சி தேர்வு என்பது**

- பல்வேறு வயது நபர்களாலும் பல்வேறு பாடப் பிரிவுகளில் பட்டம் பெற்றவர்களாலும்
- பள்ளிப்படிப்பையே முடித்து அதன் தொடர்ச்சியாக உயர்நிலை படிப்பை வெவ்வேறு நிலைகளில் மேற்கொண்டவர்களாலும் எழுதப்பட்டு வருகின்றன
- ஆக பலர் ஒரு காரியத்தை செய்யும்போது பலரும் பலவிதமான காரணத்தையும் சமூக வலைதளத்தில் சொல்லி வருகின்றனர்.

*<u>ஒரு தேர்வினை வெற்றி பெற என்ன வேண்டும் என்பது வெற்றி பெற்றவர்களாலும் சரியாக சொல்லி விட முடியாது தோல்வியை அடைந்தவர்களாலும் சரியாக சொல்லி விட முடியாது</u>*

**<u>ஏனென்றால் சென்ற வருடத்தில் கேட்கப்பட்ட கேள்வி வரும் காலங்களில் கேட்கப்படுமா என்றால் கண்டிப்பாக அந்தக் கேள்வி அப்படியே வராது என்பதுதான் உண்மை</u>**

சமூக வலைதளத்தில் வரும் விடயங்கள் அனைத்தும் உண்மையானது அல்ல, அனைத்தும் புறந்தள்ள வேண்டியதும் அல்ல,

**<u>அன்னப்பறவை எப்படி பாலை மட்டும் எடுத்துக்கொண்டு தண்ணியை நீக்கிவிடுகின்றதோ உங்களுக்கு தேவையானது எது என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதை மட்டும் சமூக வலைதளங்களில் இருந்து பெற்றுக் கொண்டு மற்றதை புறந்தள்ளுங்கள்</u>**

**நீங்கள் புறந்தள்ள வேண்டியது என நாங்கள் உங்களுக்கு சுட்டிக்காட்டும் சில விடயங்களை இங்கே தருகிறோம்.**

1. பள்ளி பாட புத்தகங்கள் மட்டுமே தேர்வினை வெற்றி கொள்ள போதும் என்று சொன்னால்
2. ஒரு வரியில் பாட குறிப்புகளை படித்து தேர்வினை வெற்றி கொள்ள முடியும் என்று சொன்னால்
3. டி என் பி எஸ் சி சிலபசை சரியாக புரிந்து கொள்ளாமல் பள்ளிப் பாட புத்தகத்தை சிலபஸ் ஆக பிரித்து அதனை பாட குறிப்பாக முழுவதுமாக பயிற்றுவிப்பது
4. மாதிரி தேர்வுகளில் தற்போது டிஎன்பிஎஸ்சி ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்களை சேர்க்காமல் காலம் கடந்த கேள்விகளையே நீங்கள் பயிற்சி செய்கிறீர்கள்
5. தேர்வுக்கு நடப்பு நிகழ்வுகள் என்பது முக்கியமான ஒரு பகுதி தான் ஆனால் நடப்பு நிகழ்வுகளுக்கு என்றே நீங்கள் பெரும் நேரம் செலவழிக்கிறீர்கள் என்றால்

## ***ஒரு முறைக்கு இருமுறை யோசிக்கவும்***

டி என் பி எஸ் சி தேர்வினை பற்றி யார் யார் என்னென்ன வகையில் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதனைப் பற்றி விரிவாக மேலே பார்த்தோம் இப்போது

- டிஎன்பிஎஸ்சி எதிர்பார்ப்பு என்ன ?
- அவர்கள் செய்யும் வழிமுறைகள் என்ன ?
- அந்த வழிமுறைகளில் நீங்கள் தேர்ச்சி பெற வேண்டும் என்றால் உங்களுடைய பயிற்சி முறையில் எந்தவித மாற்றங்களை நீங்கள் கொண்டு வரலாம் என்பதை பற்றி இனி காண்போம்

## டிஎன்பிஎஸ்சி மாணவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன?

டி என் பி எஸ் சி என்று சொல்லப்படும் தமிழ்நாடு தேர்வாணையம் தேர்வினை வைப்பதற்கான காரணம்

.

1. தமிழ்நாட்டு அரசு துறையில் அரசு பணியினை மேற்கொள்ள
2. அரசு சட்ட திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்ல
3. தகுதியான ஒரு நபரினை தேர்ந்தெடுப்பதற்காகவே தேர்வுகள் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்றன

***என்ற உண்மையை உங்கள் ஆழ்மனதில் நீங்கள் பதிய வைத்தே ஆக வேண்டும்***

அப்போதுதான் நீங்கள் முழுவதுமாக இந்த தேர்வின் நோக்கத்தை புரிந்து கொண்டு

- அந்தத் தேர்வினை வெற்றி கொள்ள என்னென்ன செய்ய வேண்டும் ??
- அந்தத் தேர்வின் வெற்றிக்கு சரியான செயல்முறை எது ??

என்பதனைப் பற்றிய புரிதல் உங்களுக்கு ஏற்படும்.

டி என் பி எஸ் சி மாணவர்களிடம் கடுமையான கேள்விகளை கேட்கின்றன என்றால்..

**அந்த கடினமான கேள்வி உங்களை எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் அறிந்த கேள்வியை தவறாக பதிலளிக்க செய்யக்கூடாது**

***காரணம்***

நம்முடைய அரசு பணி சூழலில் கடுமையான சூழலும் ஓர் பணியாளர் சந்திக்க நேரிடும் அப்படி கடினமான சூழ்நிலையை சந்திக்கும்போது தன்னுடைய அரசு பணியில் என்ன ஆணையிடப்பட்டிருக்கிறதோ அதனை அரசு பணியாளர் சிறப்பாக செய்தல் வேண்டும்.

எனவே ஒரு கடுமையான கேள்வியை ஒரு மாணவன் எதிர்கொள்ள போதுமான பயிற்சியும் போதுமான அனுபவம் மட்டுமே தேவைப்படும்.

நீங்கள் கடுமையான கேள்விகள் எக்காரணத்திற்காக கேட்கப்படுகின்றன என்பதை தெரிந்து கொண்டாலே நீங்கள் டிஎன்பிஎஸ்சி எதிர்பார்க்கும் ஒரு பணியாளராக மாறும் வாய்ப்புகள் உண்டாகும். நீங்கள் இதுநாள் வரை கடுமையான கேள்விகளை பற்றி பயம் கொண்டவராக இருந்தால் அந்த பயத்தினை தூர எறிய வேண்டிய நேரம் இது.

கடுமையான கேள்விக்கு பயம் கொள்ள வேண்டாம் எளிமையான கேள்வியை சரியான பதில் சொன்னாலே நீங்கள் அரசு பணியாளராக ஏற்படும் வாய்ப்பு

**<u>கடுமையான கேள்விகள் கேட்கப்படுவதற்கான இன்னொரு காரணம்:-</u>**

என்னவென்றால் தகுதி உடைய மாணவர்களை தேர்ந்தெடுக்க என்று பெரும்பாலும் ஒரு கருத்து உண்டு ஆனால்

1. கடுமையான கேள்விகளோ
2. தங்களை யோசிக்க வைக்குமாறு கேட்கப்படும் கேள்விகளோ
3. கேள்விகளுக்கு தரப்படும் விடை குறிப்புகள் ஆழ்ந்து யோசிக்கும் வகையில் தரைப்பட்டிருந்தாலோ

***<u>அது தகுதியானவரை தேர்ந்தெடுப்பதற்கு அன்று தகுதி இல்லாதவரை நீக்குவதற்கான வழிமுறையே ஆகும்</u>***

நீங்கள் இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டியது டிஎன்பிஎஸ்சியால் கேட்கப்படும் கேள்விகளுக்கு நீங்கள் தகுதி உள்ளவர் தான் என சொல்ல வேண்டுமே தவிர தகுதி இல்லாதவர் பட்டியலில் சேர்ந்து விடக்கூடாது.

தகுதி இல்லாதவரை வடிகட்ட மட்டுமே தான் தேர்வா என்றாலும் அதுவும் முழுமையான பதில் அன்று. வடிகட்டப்பட வேண்டும் என்றால் டிஎன்பிஎஸ்சி ஏன் பல்வேறு நிலைகளில் தன்னுடைய தேர்வினை நடத்துகின்றன.

***<u>தற்போது டிஎன்பிஎஸ்சி தொகுதி 2 பணிக்கான தேர்விலேயே மூன்று நிலைகளாக நடத்துகின்றன என்பது உங்களுக்கு தெரிந்தது ஒரு மாணவனை வடிகட்ட வேண்டும் என்று நோக்கத்தோடு டிஎன்பிஎஸ்சி தன்னுடைய கேள்விகளை வடிவமைக்கும் என்றால் அரசு பணிக்கு தேர்ந்தெடுக்க முதல் நிலை தேர்வு மட்டுமே போதுமே</u>***

டிஎன்பிஎஸ்சி மாணவர்களை வடிகட்ட மட்டுமே கேள்விகளை கேட்பதில்லை தகுதியானவர்களுக்கு அடுத்த நிலை தேர்வுக்கும் வழிவகுத்தே தன்னுடைய கேள்விகளை கேட்கின்றனர். அந்த கேள்விகளில் பல நிலைகளில் கேள்வியின் தரம் உள்ளது என்பதுதான் உண்மை..

டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதும் ஓர் மாணவன் தன் பெற்றோர் மூலமாகவும் தன் ஆசிரியர் மூலமாகவும் தானாக சமூக வலைதளம் மூலமாகவும் தெரிந்து வைத்திருக்கின்ற புரிதலோடு சேர்த்து இந்தப் பகுதியில் நீங்கள் படித்த சில விஷயங்களை நீங்கள் புரிந்து கொண்டால் டிஎன்பிஎஸ்சி எதிர்பார்ப்பது என்னவென்று உங்களுக்கு தெள்ளத் தெளிவாக புரியும்

# தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் அன்றும் இன்றும்

போட்டித் தேர்வுக்கு பொதுவாக தயாராகும் மாணவர்களின் மனதில் ஏற்படும் எண்ணம் நம்முடைய இந்த வருடத்தின் வினாத்தாள் தான் கடினமாக உள்ளது இதற்கு முன்பு வருடமோ அல்லது பழைய வினாத்தாலோ இவ்வளவு கடுமையாக இல்லை.

*(நாம்தான் மிகக் கடுமையான கேள்விகளையும் கேள்வி தரத்தையும் வினாக்களுக்கான விடை குறிப்புகளை கடுமையாக வைத்திருக்கும் தேர்வினை எதிர்கொள்கிறோம் என்று பெரும்பாலும் மாணவர்கள் நினைக்கிறார்கள்.)*

**<u>இதுதான் உங்கள் மனதிலும் ஓடும் ஒரு எண்ண ஓட்டம் என்றால் இந்தப் பத்தியை முழுவதுமாக படிக்கவும்</u>.**

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே நிறுவப்பட்ட நிறுவனம் என்பது இத்தேர்வுக்கு படிக்கும் மாணவர்களுக்கு அறிந்திருக்க கூடிய ஒரு முக்கியமான குறிப்பாகும்.

தற்போது நீங்கள் சற்று ஆழ்ந்து யோசிக்க.....

*(சிறு உதாரணத்தை உங்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறோம்.)*

1. *இந்தியாவில் முதல் முதலாக கைபேசி கண்டுபிடிக்க வருடத்தை நீங்கள் மனதில் நினைத்துக் கொள்ளவும்.*
2. *முதலில் கண்டுபிடித்த கைபேசியில் என்னென்ன சிறப்பு அம்சங்கள் இருந்தது என்பதையும் சிந்தித்துப் பார்க்கவும்.*

தற்போது உங்கள் கையில் இருக்கும் கைபேசியை ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள்.

*<u>இந்தியா சுதந்திரம் அடைந்தது 1947, சுதந்திரம் அடைந்த இந்தியாவில் கைபேசி அறிமுகமானது 1990களின் முற்பகுதியாக இருக்கலாம். தற்போதைய வருடம் 2023 நாம் 1990களின் முற்பகுதியை நாம் 1995 ஆக வைத்துக் கொண்டாலும் முதல் கைபேசிக்கும் தற்சமயத்தில் இருக்கும் கைபேசிக்கும் உள்ள சிறப்பு அம்சங்கள் ஏணி வைத்தாலும் எட்டாத அளவிற்கு தான் இருந்திருக்கின்றது</u>.*

இதில் ஆச்சரியங்கள் ஒன்றும் இல்லை, ***<u>அறிவியல் ஆய்வாளர் டார்வின் சொன்ன பரிணாம வளர்ச்சி தான்</u>*** இந்த கைபேசிக்கும் நிகழ்ந்துள்ளது.

இந்தக் கைபேசியின் உதாரணத்தை நம்முடைய தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் கேள்விகளுக்கும் பொருத்திப் பார்த்தால் **தமிழ்நாடு தேர்வாணையத்தால் கேட்கப்பட்ட முதல் கேள்விக்கும்**, **2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்நாடு தேர்வாணையத்தால் கேட்கப்பட்ட கேள்விக்கும் பரிணாம வளர்ச்சி என்பது கண்டிப்பாக உண்டு என்பதுதான்.**

*எனவே நீங்கள் சந்திக்கும் கேள்வி எதிர்கொள்ளும் கேள்வி கடுமையாக இருக்கின்றது முன்னர் கேட்கப்பட்ட கேள்விகளுடன் ஒப்பிடுகையில் சற்று தரம் கூடிய வினாக்களாக உங்கள் மனதிற்கு தோன்றும் என்றால் அதுதான் உண்மை.*

(**அடுத்த வருடம் நீங்கள் ஒரு தேர்வை எழுதுகிறீர்கள் என்றால் கண்டிப்பாக அந்தத் தேர்வின் தரமும் அந்தத் தேர்வில் கேட்கப்படும் வினாவின் கோணமும் அந்த வினாவிற்கு உண்டான பதிலை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளிலும் தமிழ்நாடு தேர்வாணையம் கண்டிப்பாக முன்னேற்றத்தை கண்டிருக்கும்**.)

நீங்கள் பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய காலகட்டத்தில் நீங்கள் அந்தத் தேர்வை எப்படி அணுகி இருப்பீர்கள் பயமும் பதட்டமும் கொண்டு அந்த தேர்வினை எழுதி இருப்பீர்கள். ஒரு வருடம் கழித்தோ, இரண்டு வருடம் கழித்தோ, அந்தத் தேர்வினை உங்கள் தம்பியோ தங்கையோ எழுதும்போது நீங்கள் அந்தத் தேர்வை பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருப்பீர்கள். ***(இப்போது என்னிடம் அந்த வினாத்தாள் கொடுக்கப்பட்டால் கண்டிப்பாக நான் அதிகமான மதிப்பெண் எடுப்பேன் என்பதே ஆகும்)***

ஏனென்றால் பத்தாம் வகுப்பு தேர்வு 12ம் வகுப்பு தேர்வு- போட்டி தேர்வு அன்று. அது ஒரு பொது தேர்வு பொது தேர்வில் கேட்கப்படும் தலைப்புகளும் பொது தேர்வில் மாணவர்களுக்கு சோதிக்கப்படும் அறிவாற்றலும் போட்டி தேர்வோடு ஒட்டி போக முடியாது.

மேலும் போட்டித் தேர்வில் கேட்கப்பட்ட பழைய வினாக்களும் உங்களுக்கு எளிமையாக தெரிந்தால் அது..

1. நீங்கள் நன்றாக படித்து உள்ளீர்கள்
2. நீங்கள் நன்றாக படிக்கக்கூடிய மாணவர்தான் என்பதை உறுதி செய்கிறது.

- இனிவரும் தேர்வுகளில் எளிமையான வினாவே இருக்காதா?
- பள்ளிப் பாட புத்தகங்களில் இருந்து கேள்விகள் வராதா?
- பழைய தேர்வுகளில் இடம்பெற்றுள்ள கேள்விகள் அந்த கேள்விகள் இடம் பெற்றுள்ள தலைப்புகளில் இருந்து கேள்விகள் வராதா?

என்றால் ***கண்டிப்பாக வரும் ஆனால். அந்தக் கேள்விகள் உங்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய அளவுகளுக்கு போதுமானதாக இருக்காது.***

ஏனென்றால் இனிவரும் தேர்வுகளிலும்,

- முந்தைய தேர்வுகளில் இருந்தும் முந்தைய தேர்வுகளில் கேட்கப்பட்ட தலைப்புகளில் இருந்தும் கேள்விகள் கண்டிப்பாக வரும்
- கேட்கப்போகும் கேள்விகளில் தரம் பல்வேறு தரப்பட்ட வழி நிலைகளிலும் படித்த மாணவர்களுக்காக கேட்கப்படும்

***உதாரணத்திற்காக*** *100 கேள்விகள் கொண்ட ஒரு தேர்வு என்று நாம் எடுத்துக் கொண்டால்*

1. அதில் அனைவராலும் பதில் அளிக்கக்கூடிய வகையில் 25 கேள்விகள் கண்டிப்பாக இடம் பெரும்,
2. தேர்விற்கு ஒரு மாதமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாதமோ பயிற்சி பெற்ற மாணவர்களால் மட்டும் விடை அளிக்கக்கூடிய வகையில் ஒரு 25 கேள்விகள் கண்டிப்பாக இடம் பெறும்.
3. மேலும் தேர்வின் நோக்கத்தையும் தேர்வு க்கான கேள்விகள் எந்த வழிமுறைகளில் தேர்வாணையத்தால் கேட்கப்படுகின்ற என்ற அறிவும் கொண்ட மாணவர்களால் ஒரு 20 கேள்விகளுக்கு பதில் அளிக்கக்கூடிய வகையில் கேள்விகள் இடம் பெரும்.
4. மீதம் இருக்கக்கூடிய 30 கேள்விகள் சரியாக பயிற்சி பெற்றோம் வரும் தேர்வில் இன்னென்ன தலைப்புகளில் இருந்து கேள்விகள் வரும் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு என்ற வகையில் வரும்.

*இந்தக் கேள்விக்கு சரியான விடை அளித்தால் மட்டுமே வெற்றி வாய்ப்பினை உறுதி செய்ய முடியும் என்று படிப்பினையை பெற்றுக் கொண்ட மாணவர்களால் தான் அந்த 30 கேள்விகள் கொண்ட வினாக்களுக்கு சரியான விடையை அளிக்க முடியும்.*

## General logic

*(பொதுவான தவறு செய்யும் காரணத்தால் மேற்கண்ட 100 கேள்விகளில் சுலபமான கேள்விகளாக இருந்தாலும் சரி, கடினமாக இருந்த கேள்விகளாலும் சரி, பத்து சதவீத தவறு ஏற்படுவதற்கான வாய்ப்பு கண்டிப்பாக அமையும். போட்டித் தேர்வுக்கு பயிற்சி செய்யும் அனைத்து மாணவர்களையும் இந்த கடைசி கூற்றை கண்டிப்பாக ஒத்துக் கொள்வீர்கள் என்று தெரியும்.)*

போட்டித் தேர்வுக்காக தயாராகும் நாம், போட்டித் தேர்வு எப்படி வருடா வருடம் தன்னுடைய தரத்தினை உயர்த்திக் கொண்டே செல்கின்றது என்ற உண்மையையும் நாம் தெரிந்து வைத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

***தமிழ்நாடு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் தேர்வு சுமாராக 2013ம் ஆண்டுக்கு பின்னரே தரமான வினாக்களை அதிகமாக கொண்ட தேர்வாக மறு உருவாக்கப்பட்டது***.

*கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலை நீங்கள் கண்டுபிடிக்கும் தருணத்தில் போட்டி தேர்வு அவர்களின் தரமும் தமிழ்நாடு பணியாளர்கள் தேர்வாணையத்தால் கேட்கப்படும் வினாக்களின் தரமும் ஏன் சமீப காலமாக உயர்ந்து வருகின்றது என்பது உங்களுக்கு தெள்ளத் தெளிவாக விளங்கும்.*

***கேள்வி* 1.** தமிழ்நாட்டில் தொடுதிரை கைபேசி பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கை எந்த ஆண்டில் இருந்து உயர்ந்து வருகிறது?
(ஜியோ நிறுவனம் எப்போது இலவச டேட்டாவினை அறிமுகம் படுத்தியதோ அதற்கு ஒட்டிய வருடத்தில் தான் தொடுதிரை கைபேசி எண்ணிக்கையும் அதிகரித்தது கிராமப்புற மாணவர்களிடமும் இணையம் இணைந்து கொண்டது)

***கேள்வி* 2.** ஒரு குடும்பத்தில் டிகிரி படித்த ஒரு மாணவனோ மாணவியோ கண்டிப்பாக உண்டு என்ற நிலை தமிழகத்தில் எந்த ஆண்டு முதல் உறுதி செய்யப்பட்டு வருகிறது அனைவராலும் கல்லூரி சென்று படிக்க முடியும் என்ற நிலை எந்த ஆண்டிலிருந்து தமிழக மாணவர்களுக்கு எளிதாக இருக்கிறது?
(முதல் முறை பட்டதாரிகளுக்கு கல்லூரிகளில் செலுத்தப்படும் தொகையில் தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பு தமிழ்நாடு அரசால் எந்த ஆண்டு இயற்றப்பட்டதோ அந்த ஆண்டு முதல் அனைவரும் டிகிரி படிக்க முடியும் என்ற நிலை தமிழகத்தில் உருவானது)

***கேள்வி* 3.** எந்த ஆண்டு தொலைபேசியின் காற்றாலை அனைத்து கிராமங்களுக்கும் செல்ல வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளால் திட்டம் வகுக்கப்பட்டது

(இந்த இணைய வழி சேவையால் தான் அனைத்து கிராமங்களும் ஒன்றிணைக்கப்பட்டு தகவல்கள் நகரமானாலும் சரி கிராம ஆனாலும் சரி ஒரே அளவில் பரிமாறக் கொள்ள முடியும் சூழ்நிலையை அடைந்தது)

இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் ஏற்பட்டிருக்கக் கூடிய சமூக பொருளாதார முன்னேற்றம்தான் போட்டித் தேர்வில் ஏற்பட்டிருக்க கூடிய முன்னேற்றத்திற்கும் காரணம் என்பதை நீங்கள் அறிந்து கொண்டால் நீங்கள் தேர்வில் வெற்றி அடைய நிச்சயமாக முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் நீங்கள் வெற்றி கொள்ள பள்ளி பாட புத்தகங்கள் மட்டுமே போதாது ஏனென்றால் இந்த பகுதியில் நீங்கள் படித்த ஒரு பத்தியை உங்கள் நினைவிற்கு கொண்டு வர விரும்புகின்றோம் ஒரு தேர்வினை அனைத்து வகையான மாணவர்களும் எழுதும் நோக்கத்தில் வினாத்தாள் வடிவமைக்கப்படுகின்றன. அவ்வாறு பள்ளி புத்தகத்திலிருந்து கேள்விகள் வரும் கண்டிப்பாக இடம் பெறும் அதற்கு மாணவர்கள் சரியாக பதில்களை சொல்லியே தீர்வார்கள் ஆனால் அந்தக் கேள்விகள் மட்டுமே உங்களுக்கு வெற்றி வாய்ப்பை பெற்றுத் தராது. இதனை நீங்கள் அறிந்து கொண்டால் நீங்கள் வெற்றி பெறுவது இன்னும் எளிமையாக அமையும். இனியும் தமிழ்நாடு தேர்வாணத்தை பற்றியும் அதன் தேர்வை பற்றியும் அலசுவோம் தெளிவோம்.

## குரூப் 4 குரூப் 2 குரூப் 1 ஆகிய தேர்வுகள் வேறு வேறா ஒன்றா ?

பொதுவாக மாணவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஒரு குழப்பம் டிஎன்பிஎஸ்சி தேர்வாணையம் அறிவித்துள்ள பாடத்திட்டத்தின் படி குரூப் 4 குரூப் 2 குரூப் 1 என்று மூன்று தேர்வுக்கு பொதுவாக பொது அறிவு பாடத்திட்டம் இருக்கின்றன

*பொது அறிவு என்றால் நம் பள்ளி பாடப் புத்தகத்தில் பயின்ற வெவ்வேறு பாடங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே தேர்வாக நடத்தப்படுகின்றன.*

இதில் ***குரூப் 4 குரூப் 2 குரூப் 1*** ஆகிய மூன்று தேர்வுக்கு கிட்டத்தட்ட ஒரே மாதிரியான பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ள காரணத்தினால் மாணவர்களும் தாங்கள் ஒரு தடவை பொது அறிவு பாடத்தினை பயின்றால் மூன்று தேர்வுக்கு பொதுவாக பதில் அளிக்க முடியும் என நம்புகின்றனர்

நம்பிக்கையில் தவறு ஒன்றும் இல்லை நம்பிக்கைதான் வெற்றியின் முதல் படி ஆனால் மாணவர்கள் தவறவிடக்கூடிய இடம் என்னவென்றால் பாடத்திட்டங்கள் ஒன்றாக இருக்கக்கூடிய பட்சத்திலும் அதில் கேட்கக்கூடிய வினா என்பது வேறு வேறு வகையை சார்ந்து இருக்கின்றன.

***காரணம்***

1. மூன்று தேர்வுக்கும் ஒரே நிலையிலான பதவி வழங்கப்படுவது இல்லை
2. மூன்று தேர்விலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் பணியானது வெவ்வேறு சூழ்நிலையில் உள்ள காரணத்தினால் அவர்களுக்கு கேட்கப்படும் வினாவின் தரமும் மாறுபட்டு வருகின்றன

*இதனை மாணவர்கள் அறிந்து கொள்ளும் பட்சத்தில் பாடக்குறிப்புகளில் ஒற்றுமை இருந்தாலும் அந்த அந்த தேர்வினில் கேட்கப்படும் கேள்விகளுக்கு அல்லது தேர்வினில் அளிக்கப்பட்டுள்ள விடை குறிப்புகளை தேர்வு செய்யம் வகையிலும் ஒரு தேர்வுக்கும் மற்ற இரண்டு தேர்வுக்கும் சற்று வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை மாணவர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்*

**நீங்கள் சொல்வது சரி என்றால்.. ஏன்?** மூன்று தேர்வுக்கு ஒரே பாடத்திட்டத்தினை டிஎன்பிஎஸ்சி வகுத்திருக்க வேண்டும். இந்தக் கேள்வி உங்கள் மனதில் எழும் என்றால் நீங்கள் சரியான திசையில் சிந்திக்கிறீர்கள் என்று பொருள்.

மூன்று தேர்வுக்கு ஒரே பாடத்திட்டங்கள் என்றால் மூன்று தேர்வுக்கு தேர்ச்சி பெற்ற பணியாளர் எங்கு பணியில் அமர்த்தப்படுகிறார் என்று நீங்கள் பார்த்தீர்களானால் நீங்கள் மூன்று தேர்வுக்கு ஒரே பாடத்திட்டம் இருப்பது சரி தான் என்று உங்களுக்கு தோன்றும்.

**உதாரணமாக :-**

- ***குரூப் 4*** தேர்ச்சி பெற்று வருவாய் துறையில் பணி அமர்த்தப்படும் இளநிலை உதவியாளர் தன்னுடைய பணியினை வருவாய் துறைக்கு உட்பட்டு செய்வார்.
- ***குரூப் 2***தேர்ச்சி பெற்று வருவாய்த் துறையில் உதவியாளராக பணியமர்த்தப்படும் ஒரு பணியாளர் வருவாய்த்துறைக்கு உட்பட்டு பணியினை செய்வோம்.
- ***குரூப் 1***தேர்வில் தேர்ச்சி பெற்று வருவாய்த்துறையில் துணை ஆட்சியராக பணியமர்த்தப்படும் ஒரு பணியாளர் வருவாய் துறைக்கு உட்பட்டு பணியினை செய்வார்.

***(மூன்று தேர்வும் வேறு வேறு நிலையில் இருக்கும் பணியாளர்களை தேர்வு செய்தாலும் அந்த மூன்று தேர்விலும் தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் ஒரே துறையின் கீழ் செயல்படுவதனால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாடத்திட்டமும் ஒரே மாதிரியாக இருப்பதில் எந்த வித ஆச்சரியமும் இல்லை)***

*இப்போது அந்த ஒரே துறையில் பணிபுரியும் பணியாளர்கள் வேறு வேறு சூழ்நிலைகளையும் தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை வேறு வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த கூடியவர்களாக இருப்பார்.*

ஒரே துறையில் இருந்தாலும் ஓர் பணியாளர் சந்திக்கும் சூழ்நிலை, ஒரு பணியாளருக்கு அளிக்கப்பட்ட அதிகாரம், மூவருக்கும் ஒன்று சேர்த்தல் போல் இருக்காது என்பதை டிஎன்பிஎஸ்சி படிக்க ஆரம்பத்திலிருந்து உங்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது ஆக டிஎன்பிஎஸ்சி தன்னுடைய வித்தியாசத்தை எங்கு காட்டுகிறது என்றால்? ஒரு தேர்வுக்கும் இன்னொரு தேர்வுக்கும் கேட்கப்படக்கூடிய தேர்வுகளின் வினாக்களில் தரத்தை பிரித்து பணியாளர்களை தேர்வு செய்கிறது என்பதுதான் நிதர்சனம்.

தற்போது பெரும்பாலான மாணவர்கள் சொல்லிக் கொள்வது அனைத்து தேர்வுக்கு ஒரே பாடத்திட்டம் தான் ஆக அனைத்து தேர்வுக்கும் நாம் ஒரே மாதிரியாக படித்து ஒரே மாதிரியான கேள்விகளுக்கு விடையளித்து பழகினாலே தேர்ச்சி பெற முடியும் என நினைப்பது உண்மை அல்ல.

*(ஒவ்வொரு தேர்வுக்கு அதுக்கு நேர் தயாரித்த கேள்வித்தாளை பயன்படுத்தியும் அதற்கு பயிற்சி பெற்றோம் அந்தத் தேர்வினை அணுகுவது எவ்வாறு என்பன தெரிந்து வைத்தும் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டியது மாணவர்களின் தேவை)*

***குரூப் 4 ஒரு நிலை தேர்வு என்பார்கள்*** ஒரு பணியாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால் தேர்வு எழுதிய ஒட்டுமொத்த நபர்களில் அதிகம் விடையளித்தவர்களாக இருக்க அவசியம் ஏற்படுகிறது ஆக ***குரூப் 4*** நீங்கள் அனைத்து வினாக்களையும் ஒரே மாதிரியாக அணுக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

***குரூப்*** 2 மற்றும் ***குரூப்*** 1 தேர்வுடன் ஒப்பிட்டால் நமக்கு தெள்ளத் தெளிவாக தெரிவது.அனைத்து வினாக்களையும் ஒரே மாதிரியாக அணுக தேவையில்லை.

*ஏனென்றால் இத்தேர்வினில் பொது அறிவு தாள் என்பது அவர்களுக்கு பணியினை பெற்று தருவதாக இருப்பதல்ல அவர்கள் முதன்மைத் தேர்வுக்கு செல்ல ஒரு ஏணிப்படியாகவே முதல் நிலை தேர்வு உள்ளது ஆக முதல் நிலை தேர்வுக்கு செல்ல ஒரு சில நுணுக்கங்களை மாணவர்கள் பயின்று அது வள்ளுவனார் ஆகி அதனைத் தேர்வு அறையில் சரியாக செய்யும் பட்சத்தில் அவர்கள் இலகுவாக முதன்மை தேர்வுக்கு செல்வர்*

***குரூப்*** 2 மற்றும் ***குரூப்*** 1 ஆகிய தேர்விலும் கூட வித்தியாசங்கள் உண்டு. ***குரூப்*** 2 என்று சொல்லப்படும் தேர்வில் மொழிப்பாடமும் உள்ளடக்கியது பொது அறிவுத்தாலும் உள்ளடக்கிய தேர்வாகும் தொகுதி ஒன்று என்பது வெறும் பொது அறிவு தாளினை மட்டுமே கொண்ட தேர்வாகும்.

## குரூப் 4 குரூப் 2 மற்றும் குரூப் 1 ஆகிய ஒவ்வொரு தேர்விற்கும்

1. நாம் ஒவ்வொரு மாதிரியாக பயிற்சி செய்தல் வேண்டும்
2. பயிற்சி பெறுதல் வேண்டும்
3. தேர்வினை அனுபவித்தல் வேண்டும்
4. அணுகுதல் வேண்டும்
5. தேர்வினில் வெற்றி பெற அதற்குரிய சித்தாந்தங்களையும் அதற்குரிய நுணுக்கங்களையும் அதற்குரிய சிறப்பு அம்சங்களையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ளுதல் மட்டுமே

அவர்களை தேர்வில் தேர்ச்சி அடைய செய்யும்.

**<u>இப்போது முக்கியமான பகுதிக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்</u>** *<u>நான் ஒரு துறையில் வேலை செய்யும் போது அந்த துறையில் நாம் தேர்வுக்கு படித்த பாடங்கள் எவ்வாறு துணை புரிய வாய்ப்பு உள்ளது இதனை நீங்கள் அறிந்து கொண்டால்</u>*

- எனக்கு இந்தப் பாடம் வராது
- எனக்கு இந்த பாடம் நன்றாக வரும்
- எனக்கு இந்த பாடம் பிடித்த பாடம்
- எனக்கு இந்த பாடம் பிடிக்காத பாடம்

என்று எந்த பாடத்தையும் நீங்கள் ஒதுக்க மாட்டீர்கள்

எந்த ஒரு பாடத்தையும்

- நீங்கள் பயிற்சி செய்ய
- படிக்க
- தேர்வினில் அந்த பாடத்தில் கேட்கப்படும் கேள்வியை சரியாக பதிலளிக்க அந்த பாடத்திட்டத்தினை நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்

ஏன் டிஎன்பிஎஸ்சி இந்தப் பாடத் தலைப்பினை இந்தப் பாட திட்டத்தினை நமக்கு அளித்துள்ளது என்பதனை மாணவர்கள் அறிந்து கொள்ளும் போது அது எந்த தேர்வாக இருந்தாலும் சரி பாடங்களை ***<u>புரிந்து அறிந்து தெரிந்து தெளிந்து</u>*** படித்தால் உங்களுக்கு தேர்வு மிக எளிதானதாக இருக்கும்

## நாம் பார்க்க போகும் வேலைக்கு நாம் தேர்வினில் படித்த பாடத்திற்கும் என்ன சம்பந்தம்

இந்த தலைப்பினில் நாம் கற்க இருக்கும் பாடத்தினை இரண்டு பிரிவாக பிரித்து உங்களுக்குச் சொல்கிறேன்.

**முதலில்**

ஒரு உதாரணத்தினை எடுத்துக்கொண்டு அந்த ஓர் உதாரணத்தில் நம் தேர்வுக்கு படித்த பாடம் எவ்வாறு நம் வேலையில் அதனை பயன்படுத்துவோம் என்பதனையும்

**இரண்டாவது பிரிவாக**

ஒவ்வொரு பாடத்திட்டமும் நமக்கு எதுக்கு அளிக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு பாட தலைப்புகளும் நமக்கு ஏன் டி என் பி எஸ் சி எல் வடிவமைக்க பட்டது என்பதனையும் சிறு விளக்கங்களை கொண்டு நாம் அறிந்து கொள்வோம்

**முதல் பிரிவு**

***"இந்த நிகழ்வு காவேரி டெல்டா பகுதிகளில் வேலை செய்யும் பணியாளர் மற்றும் ராமநாதபுர பகுதிகளில் வேலை செய்யும் பணியாளர்களும் தாங்கள் தேர்வில் பயின்ற புவியியல் பாடம் எவ்வாறு அவர்கள் பணி செய்யும் காலத்தில் உதவி புரியும் என்பதனை அந்தப் பணியாளர்களிடம் தன்னுடைய தேவையைபூர்த்தி செய்ய வரும் ஓர் இந்திய குடிமகனின் உதாரணங்களோடு பொருத்திப் பார்ப்போம்"***

- *அந்த இரண்டு பணியாளர்களும் வேறு வேறு நபர்கள் அல்ல*
- *நீங்கள் தான் அந்த இரண்டு பகுதிகளிலும் வேலை செய்ய போகும் ஒரு பணியாளர்களாக கற்பனை செய்து கொள்ளுங்கள்*
- *காவிரி பகுதியை பற்றி பேசும்போது நீங்கள் காவேரி டெல்டா பகுதியில் வேலை செய்யும் ஒரு பணியாளராகவும்*
- *ராமநாதபுர பகுதியை பற்றி பேசும்போது நீங்கள் ராமநாதபுர பகுதியில் வேலை செய்யும் ஒரு பணியாளர்களாக*

***நீங்கள் உங்களை கற்பனை செய்து கொள்ளவும்***

நீங்கள் புவியியல் பாடத்தில் கீழ்க்கண்ட இரண்டு விஷயங்களை கற்க வாய்ப்பு உள்ளது.

*(நீங்கள் தேர்வுக்கு முன்பே படிக்க தயாராகி விட்டீர்கள் என்றால் சொல்லப்படும் விஷயங்கள் உங்களுக்கு நன்கு புரிய வாய்ப்புள்ளது அல்லது நீங்கள் தற்போது தான் படிக்க ஆரம்பத்துள்ளீர்கள் என்றால் சொல்லப்படும் விஷயம் நீங்கள் அந்தப் பாடத்தில் அந்த தலைப்பினை படிக்கும் போது உங்கள் மனதில் பசு மரத்தாணி போல் பதியும் என்பதும் நிதர்சனம்.)*

## Practical example 1

காவேரி படுகை பகுதி என சொல்லப்படும் டெல்டா பகுதி நல்ல கனிம வளங்களையும் நல்ல நீர் வளங்களையும் கொண்ட பகுதியாக இருக்கின்றன அங்கு விவசாயம் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன விவசாயம் என்பது வெறும் பயிர்களை மட்டும் சார்ந்தது அல்ல கால்நடைகளையும் மற்ற உயிர்களையும் சார்ந்த ஒரு பிரிவாகும்.

நீங்கள் காவேரி படுகையில் பணிபுரியும் ஓர் பணியாளர் உங்களது வேலை நிமித்தமாக நீங்கள் அலுவலகத்தில் உள்ள போது உங்களை சந்திக்க ஓர் இந்திய குடிமகன் வருகிறார் அது சற்று புயல் அடித்து ஓய்ந்து இருக்க கூடிய ஒரு காலம் நீங்களே யூகித்துக் கொள்ளலாம் உங்களை சந்திக்க அல்லது உங்களது அலுவலகத்துக்கு வரக்கூடிய இந்திய குடிமகன் என்ன தேவையை மனதில் வைத்து உங்களை சந்திக்க வாய்ப்பு உள்ளது என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

**காவேரி படுகை பகுதி என்பது என்ன ?**

புவியியல் அமைப்பைச் .சார்ந்தது ??என்பதனையும் சொல்லியாயிற்று

உங்களை சந்திக்க வரம் இருக்கும் குடிமகன் புயல் அடித்து ஓய்ந்த நிலையில் உங்களை சந்திக்க வருகிறார் அவருடைய தேவைகள் கீழ்கண்டவைகளில் ஏதேனும் ஒன்றாக இருக்க வாய்ப்புகள் உண்டு அவர் டெல்டா பகுதியைச் சார்ந்த விவசாயியாக இருக்கலாம் அவருடைய பயிர்கள் புயல் காரணமாக பாதிப்படைந்து கூட இருக்கலாம் அவ்வாறு பாதிப்புக்கு உள்ளாயிருந்த பயிர்களை காப்பீடு செய்த ஒரு விவசாயி அந்த காப்பீடு சம்பந்தமாக உங்களைச் சந்திக்க வர வாய்ப்புள்ளது இவை எல்லாம் நீங்கள் சிந்தித்து பார்க்க உங்களுக்கு எது தோதுவாக இருந்திருக்கும் என்றால் டிஎன்பிஎஸ்சி தன்னுடைய பாடத்திட்டத்தில் புவியியல் என்ற பாடப்பிரிவை வைத்ததால் மட்டுமே தங்களுக்கு தமிழகத்தை பற்றிய

பல்வேறு புவியியல் சூழ்நிலைகளையும் பல்வேறு தரப்பட்ட கால நிலைகளையும் பற்றி அறிய வாய்ப்பாக அமைந்திருக்க வேண்டும்

## Practical example 2

தற்போது நீங்கள் ராமநாதபுரத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் புவியியல் ரீதியாக ராமநாதபுரத்தை பற்றி சொல்ல வேண்டும் என்றால் ராமநாத புற பகுதி என்பது நீர் நிலைகள் அதிகம் இல்லாத ஒரு பகுதியாக தமிழகத்தில் இருந்து வருகிறது அப்பகுதி கடற்கரை பகுதியை ஒட்டி உள்ளதால் அங்கு கடற்கரைச் சம்பந்தமான பொருளாதாரம் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர் பின்பு அரசின் பல்வேறு திட்டங்களால் நீர் பாசன வசதிகள் பெற்று ராமநாதபுரத்தில் வேளாண்மை செய்ய வாய்ப்பாக அமைந்திருக்கின்றது இது ஒரு சிறு புவியியல் குறிப்பாகும்.

இங்கு உங்களைச் சந்திக்க வரும் குடிமகனின் தேவை என்னவாக இருக்கும் என்பதை நீங்களே சிந்திக்க உங்களுக்கு வாய்ப்பாக விட்டுவிடுகிறேன்.

இவ்வாறு ஒவ்வொரு பாடத்திற்கும் டிஎன்பிஎஸ்சி வகுத்துள்ள பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடமும் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு அடிப்படை அறிவினை அனைத்து தரப்பிலும் தர வல்லதாகவே டிஎன்பிஎஸ்சி தன்னுடைய பொது அறிவு தாளினை வடிவமைத்து உள்ளது.

இக்காரணத்தினால் தான் பொது அறிவு தாள் என்பது அனைத்து விதமான தேர்வுக்கும் பொதுவான ஒரு தாளாக tnpsc நடைமுறைப்படுத்து வருகிறது மேலும் இரண்டாவது பிரிவில் நாம் ஒவ்வொரு பாடத்திட்டமும் ஏன் வகுக்கப்பட்டுள்ளன என்பதனை சிறு விளக்கங்களுடன் பார்ப்போம்

## நாம் பார்க்க போகும் வேலைக்கு நாம் தேர்வினில் படித்த பாடத்திற்கும் என்ன சம்பந்தம் (இரண்டாம் பிரிவு)

பாடமும் அந்த பாடத்திற்கான தேவை

முதலில் பொது அறிவு தாளானது 10 தலைப்புகளை கொண்ட ஓர் கூட்டு த்தாள் ஒவ்வொரு தலைப்பும் ஒவ்வொரு பாடங்களைச் சார்ந்த தலைப்புகள் ஆகும்

1. ***<u>அறிவியல் பாடம்</u>***-

இந்தப் பாடத்திற்கான தேவைகள் என்ன அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் தான் தொழில்நுட்பம் என்ற பாடப்பிரிவும் நமக்கு கற்றுத் தரப்படுகிறது தொழில்நுட்பத்தின் மூலமாக நாட்டில் உள்ள அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்ய முன்னெடுப்புகள் இந்திய அரசாலும் தமிழக அரசாலும் மேற்கொள்ளப்படுகின்றன

***<u>உதாரணமாக</u>***

பெண்களின் பாதுகாப்புக்காக அவசர எண்ணாக ஒரு தொலைபேசியை அறிவிப்பதில் தகவல் தொழில்நுட்பம் அதில் அடங்கியுள்ளது. தொழில்நுட்பங்களை அறிந்த ஒரு மாணவனால் அரசு அமல்படுத்தும் திட்டங்களையும் சட்டங்களையும் அதன் நோக்கங்களையும் மக்களுக்கு கொண்டு சேர்க்க ஏதுவாக இருக்கும் வகையில் பாடம் வடிவமைக்கப்படுகிறது

2. ***<u>நடப்பு நிகழ்வுகள்-ஏன் ஒருவர் நடப்பு நிகழ்வுகளை தெரிந்து இருக்க வேண்டும் என்றால்?</u>***

அப்போதுதான் என்னென்ன மாற்றங்கள் வந்திருக்கின்றன என்பதனை ஓர் மாணவன்/ மாணவி சரியாகப் புரிந்து வைத்திருக்க முடியும்

***<u>உதாரணமாக</u>***

பெண்களுக்கான திருமண உதவி திட்டம் சமீப காலத்தில் பெண்களுக்கான கல்லூரி உதவி திட்டமாக மாற்றப்பட்டது. நடப்பு நிகழ்வு என்பது அத்துறையினில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அரசு மூலமாக கண்டிப்பாக அறிவுறுத்த ப்படும்.

அரசுப்பணிக்கு தயாராகும் மாணவர்களும் இவ்வாறு

- என்னென்ன மாற்றங்கள்
- என்னென்ன கண்டுபிடிப்புகள் வந்திருக்கின்றன
- என்பதனை அறிந்து வைத்திருக்கும் போது அவரது பணியினை சிறப்பாக செய்ய வாய்ப்பு உள்ளது

3. ***புவியியல்-***

பாடத்திட்டத்தினை பற்றி நாம் பிரிவு ஒன்றில் கற்றுக்கொண்டோம்

4. ***இந்திய வரலாறு-***

இவ் வரலாறானது நமக்கு சொல்லித் தருவது பல்வேறு காலங்களில் பல்வேறு தரப்பட்ட மக்களால் இந்தியா ஆளப்பட்டது அப்போது அரசனே அனைத்தையும் முடிவு செய்யும் ஒரு ஆளாக இருந்தார் அந்தக் காலகட்டத்தில் பொருளாதார சார்ந்த விஷயங்கள் அவ்வளவு உயர்ந்ததாக இல்லை மக்களும் பல்வேறு தரப்பட்ட படிநிலைகளில் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு தங்களுடைய பணியாக கட்டளைகளும் விதிக்கப்பட்டிருந்த காலம். மேலும் வரலாறு நமக்குச் சொல்லிக் கொள்வது *வரலாற்று நிகழ்வு என்பது ஓர் சுழற்சி அந்த சுழற்சி திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கும் என்பதுதான்.*

5. ***இந்திய ஆட்சியில்-***

இந்திய வரலாறு என்ற பாடத்தில் அரசன் என்பவனே அனைத்து முடிவுகளையும் செய்யும் அதிகாரம் மிக்கவராக பார்த்தோம். இந்திய ஆட்சியில் என்ன சொல்கின்றது என்றால் மக்கள் அனைவரும் சமம் மக்களுக்கு தேவையான முடிவுகளை எடுக்க வேறு, வேறு நபர்களை நியமயத்தில் வேண்டும் சுருங்கச் சொன்னால் சட்டம் இயற்ற ஒருவர் சட்டத்தை அமல்படுத்த ஒருவர் சட்டம் ஒழுங்காக அமல்படுத்தப்படுகிறதா என்றும் அவ்வாறு ஒழுங்காக அமல்படுத்தாத போது அதனை சரி செய்ய நீதிமன்றம் என அனைத்து முடிவுகளையும் ஒருவரே எடுக்கக் கூடாது என்று தனித்தனியாக பிரித்து அளிக்கப்பட்டுள்ளது

6. ***இந்திய பொருளாதாரம்-***

இந்தியா என்பது ஒரு துணை கண்டம் என்பது புவியியல் படித்த மாணவர்களுக்கு அறிந்திருக்க வாய்ப்புண்டு துணை கண்டம் என்றால் பல்வேறு கால நிலைகள் இருக்கும் பல்வேறு நில அமைப்புகளை கொண்டிருக்கும் ஆக வேறு வேறு நில அமைப்புகளை கொண்ட மனிதர்கள் வேறு வேறு தொழிலினை செய்ய வாய்ப்பாக இருந்திருக்கும். நீர் நிலைகளை ஒட்டி உள்ள ஓர் மனிதன் விவசாயத்தினை சார்ந்த பொருளாதாரத்தினை மேற்கொள்ளும் ஒருவனாகவும் நீர் நிலையை ஒட்டி

உள்ள ஒரு மனிதன் தொழில்நுட்பங்களை கற்று அறிந்தவனாக இருந்திருக்கும் பட்சத்தில் போக்குவரத்து நுட்பங்களை அறிந்து அதனைச் சார்ந்த பொருளாதாரத்தினை மேற்கொள்ளும் ஒருவனாகவும் இருக்க வாய்ப்புண்டு. நவீன பொருளாதாரத்தில் சொல்லப்படும் மூன்று பிரிவாக ***விவசாயம், தொழில் துறை, மற்றும் சேவை துறையில்*** வெவ்வேறு தரப்பட்ட மக்களும் தங்களை ஈடுபடுத்தி பொருட்களை ஈட்ட முயற்சிக்கின்றனர். இவ்வாறு மக்கள் தொகையில் அனைவரும் ஏதோ ஒரு பிரிவினில் பொருளாதாரத்தை சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

7. ***இந்திய தேசிய இயக்கம்-***

இந்தியா வெவ்வேறு காலங்களில் அரசர்களால் ஆளப்பட்டது என்றும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு இந்தியா ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டது அரசர்கள் ஆண்ட காலத்தில் பல்வேறு தரப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் இருந்த போதும் இந்திய நாட்டின் வளங்கள் மக்களுக்கு பயன்படாமல் வேறு ஒரு நாட்டிற்கு பயன்பட்டது கிடையாது ஆனால் ஆங்கிலேயர்கள் காலத்தில் இந்திய நாட்டில் உற்பத்தியாகி அனைத்து வளங்களும் இந்தியாவில் இருக்கும் மக்களுக்கு உதவியாக இல்லாமல் அயல்நாட்டில் இருக்கும் முதலாளிகளுக்கு உதவியாக இருந்தது இதனை எதிர்த்து பல்வேறு சுதந்திர போராட்ட வீரர்கள் இந்தியாவிற்கு சுந்தரத்தினை பெற்று தந்தனர்

***உதாரணமாக***

காந்தியடிகள் அகிம்சை என்ற போராட்ட முறையில் தன்னுடைய சுதந்திர போராட்டத்தினை ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தி இந்தியாவிற்கு விடுதலை பெற்று தந்தார். (*அரசர் காலத்திலும் சரி ஆங்கிலேயர்கள் காலத்திலும் சரி மக்கள் விடுதலைக்காக போராடினர் என்பது உண்மை அப்படி அரும்பாடு பட்டு வந்த சுதந்திரத்தினை எவ்வாறு பேணி பாதுகாக்க வேண்டும் என்று இந்தப் பாடத்திட்டம் மாணவர்களுக்கு சொல்லாமல் சொல்கிறது)*

8. ***தமிழ் சமூகம்-***

தமிழ்நாடு என்ற பகுதியில் வாழும் ஒரு மாணவர்களாக இருக்கும் பட்சத்தில், தமிழ்நாடு ஆங்கிலேயர்களாலும் ஆட்சி செய்யப்பட்டது என்பதுதான் உண்மை அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழகம் எவ்வாறு சுதந்திரத்திற்காக பாடுபட்டது என்றும் தமிழ் சமூகத்தினை மேம்படுத்த சமூக சிந்தனையாளர்கள் என்னென்ன செய்தார்கள் என்பதனையும் ***இப்பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் கற்றுக்கொள்ள பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது*** மேலும் தமிழகம் என்ற பூகோள அமைப்பானது எவ்வாறு மனித சமூக வளர்ச்சி இணை பெற்றது என்பதையும் உலகப் பொதுமறையாக

போற்றப்படும் திருக்குறள் எவ்வாறு வாழ்க்கைப்படி நிலைகளுக்கு பயன்படுகின்றன என்பதை பற்றியும் மாணவர்கள் படிக்க பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளன.

9. ***தமிழ்நாட்டு நிர்வாகம்***

ஒவ்வொரு காலத்திலும் மக்களுக்கு தேவையானவற்றினை செய்து கொடுக்க ஒரு நிர்வாக அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டும் தற்போது தமிழகத்தில் மக்களின் தேவைகளாக இருப்பவை

- கல்வி
- சுகாதாரம்
- வேலை வாய்ப்பு
- இட ஒதுக்கீடு
- பொருளாதார முன்னேற்றம்
- அனைவரும் சமம் என்ற ஒரு நிலை
- எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வாய்ப்பினை பெற்று தருதல் என தேவைகள் இருக்கின்றன.

1. அதனை பூர்த்தி செய்ய தமிழ்நாடு எவ்வாறு பயணித்திருக்கிறது ?
2. தமிழ்நாடு என்ன கொள்கை முடிவுகளை எடுத்துள்ளது?
3. தமிழ்நாடு புவியியல் ரீதியும் பொருளாதாரம் ரீதியும் எவ்வாறு உதவியாக இருக்கின்றது ?
4. என்று மாணவர்கள் கற்க இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது

10. ***கணக்கு***-

*எளிமையாக உதாரணம் சொல்ல வேண்டும் என்றால்* கணக்கினை பயன்படுத்தும் துறைகள் அதிகமாக தமிழக அரசில் உள்ளன குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் ***வர்த்தக வரி துறை,வரி வசூலிக்கும் துறை*** ஆகியவற்றில் கணக்குகள் கண்டிப்பாக இடம் பெறும் இவ்வாறு ஒவ்வொரு துறைக்கும் கணக்குச் சம்பந்தப்பட்ட பணி வாய்ப்புகள் உள்ளன இந்தப் பாடத்திட்டத்தில் கற்றுக் கொள்ளும் விஷயங்கள் அத்துறையில் பணியாற்றும் நபர்களுக்கு உதவியாக இருக்கும்.

***தற்போது அனைத்து தேர்விலும் இருக்கக்கூடிய மொழி பாடம் ஏன் தேவை என்பதனை பார்ப்போம்***

தமிழ் மொழி பாடமாக இருந்தாலும் சரி ஆங்கில மொழி பாடமாக இருந்தாலும் சரி ஒன்றினை ஆழமாகவும் தெளிவாகவும் அறிந்திருக்கும் ஒருவரால் பிறவற்றையும் சரியாகவும் தெளிவாகவும் ஆழமாகவும் அறிய வாய்ப்புகள் கிடைக்கும் குறிப்பாக சொன்னால் ஓர் மொழியில் உள்ள ***இலக்கணம், இலக்கியம், சமகால முன்னேற்றம்*** ஆகியவற்றினை ஒருவர் அறிந்திருக்க போது பிற பாடங்களையும்

அவ்வாறு அறிந்து கொள்ள அவரால் முடியும் அவர் அறிந்து கொள்ள இந்த மொழிப்பாடம் அவர்களுக்கு துணைச் செய்யும் என்ற பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்ட உள்ளது.

சில மாணவர்களுக்கு படித்த படித்து அதிலேயே தன்னுடைய பொன்னான காலங்களை செலவழித்து தேர்வு வரும் வேளையில் பிற பாடங்களை படிக்க முயன்றாலும் பிறப்பாடங்களில் உள்ள நுணுக்கங்களை

- தேர்வு ரீதியில் அணுகவும்
- தேர்வு ரீதியில் பயிற்சி செய்யவும்
- அந்த பாட தலைப்புகள் தேர்வில் கேட்கப்படுகின்றனவா என்பது கூட தெரியாமல் பயிற்ச்சினை மாணவர்கள் செய்கின்றனர்.

ஒவ்வொரு பாடத்திட்டமும் மாணவர்களுக்கு ஒவ்வொரு அறிவினை பெற்று தருகின்றன என்பதனை தெள்ளத் தெளிவாக புரிந்துகொண்டால்

இதன் மூலம் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்தையும் ஏன் படிக்கப்பட வேண்டும் என்பதனை தெரிந்து கொண்டு படிக்க முயற்சி செய்தால் பாடத்திட்டத்தில் உள்ள தலைப்புகள் அவருக்கு எளிமையாகவே தோன்றும் என்பது எங்களுடைய எண்ணம். ***ஆக ஒவ்வொரு பாடத்திட்டத்திலும் நாம் கல்லூரி அளவு அறிவினை பெற்றிருக்க வேண்டியது அல்ல*** ஒவ்வொரு தேர்விற்கும் எந்த விகிதாச்சாரத்தில் கேள்விகள் கேட்கப்படுமோ எந்த தலைப்புகளில் கேள்விகள் வருமோ எதனை அடிப்படையாக தெரிந்து கொண்டால் தேர்வில் வெற்றி பெறலாமோ அதனை மட்டுமே நாம் செய்வோமானால் தேர்வில் வெற்றி பெறுதல் எளிது தேர்வில் எளிதாக வெற்றி பெற என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் இனி காண்போம்.

## தேர்வில் எளிதாக வெற்றி பெறும் கணக்கு

குரூப்1 குரூப் 2 குரூப் 4 இந்த தேர்வுகள் தான் மாணவர்கள் பொதுவாக எழுதக்கூடிய தேர்வாக இருக்கின்றது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

அப்படி இருக்கையில் ஒரு தேர்வுக்கு தயாராகும் மாணவர் அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற ஒரு தோராயமான கணக்கினை போட வேண்டிய தேவை.

***எத்தனை வினாக்கள் சரியாக எழுதும் பட்சத்தில் எனக்கு அரசு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்பதனை தெரிந்து இருக்க வேண்டும்.***

*(இதை தான் மாணவர்கள் பொதுவாக கட் ஆப் ரேஞ்ச் என்று சொல்வார்கள் இந்த கட் ஆப் ரேஞ்ச் என்பது ஒவ்வொரு பிரிவினருக்கும் வேறு ஆக இருக்கும் பட்சத்திலும் ஒரு தேர்வில் அந்தக் கட் ஆப் மதிப்பெண் என்பது ஐந்து முதல் எட்டு கேள்விகள் வித்தியாசங்கள் இருக்க வாய்ப்புண்டு அதற்கு மேல் ஏற்றத்தாழ்வு இருக்க வாய்ப்புகள் இல்லை)*

***இதை ஏன் சொல்கிறோம் என்றால்?***

***ஒரு பிரிவினருக்கு என்ன கட் ஆப் தேவைப்படும் என்று மாணவர்கள் திட்டமிட கூடாது. கண்டிப்பாக இத்தனை கேள்விகள் சரியாக எழுதி விட்டால் நான் எந்த பிரிவினர் இருந்தாலும் சரி, எனக்கு தேர்வில் தேர்ச்சி கிடைத்து விடும் என்ற அடிப்படையில் மாணவர் இதனை அணுகுதல் வேண்டும் என்பதனை சொல்லவே.***

மொழி பாடத்தில் அனைவரும் 85 வினாக்கள் முதல் 95 வினாக்கள் வரை தாராளமாக எடுப்பவராக இருப்பார். மாணவர்களின் தேர்ச்சியை உறுதி செய்வது பொது அறிவு தாள் என்பதுதான் உண்மை.

பொது அறிவுத்தாளில் பத்து பாட தலைப்புகளில் டிஎன்பிஎஸ்சி பாடத்திட்டத்தினை வகுத்துள்ளது என்பது நாம் அறிந்தது அந்தப் பத்து பாட தலைப்புகளில் தலைப்புக்கு 20 உத்தலைப்புகள் இருப்பது பெரும்பாலான மாணவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை.

*(இந்த உத்தலைப்புகள் மாணவர்கள் ஏன் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றால்? ஒரு பாடத்திட்டத்தில் எத்தனை கேள்விகள் வர வாய்ப்பு இருக்கின்றன என்ற கணக்கினை ஒரு மாணவர்*

*தெரிந்துகொள்ள பாட தலைப்புகளையும் பாட தலைப்புகளில் உள்ள உத்தலைப்புகள் தெள்ளத் தெளிவாக அறிந்திருத்தல் அவசியமாக தேவைப்படுகிறது)*

**உதாரனத்திற்கு**

ஆப்டிடியூட் என்று சொல்லப்படும் கணக்குப் பாடத்தில் இருந்து மட்டும் 25 கேள்விகள் மூன்று தேர்வுகளிலும் கேட்கப்படுகின்றன என்பது மாணவர்களுக்கு தெரியும் அந்த கணக்கு பாடம் நம்முடைய தேர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும் பட்சத்தில் மாணவர்கள் அந்த 25 கேள்விகளுக்கு 20 கேள்விகளுக்கு குறையாமல் மதிப்பெண் எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது *இதனைத் தொடர்ந்து மீதம் இருக்கும் ஒன்பது பாட தலைப்புகளில் இருந்து தேர்விற்கு குரூப் 2 குரூப் 4 75 கேள்விகள் கேட்கப்பட வேண்டிய உள்ளது குரூப் 1 தேர்வுக்கு 175 கேள்விகள் கேட்கப்பட வேண்டிய உள்ளது.*

***நாம் இப்போது அந்த வெற்றி கணக்குக்கு வந்து விட்டோம்***

*குரூப்* 1 மற்றும் *குரூப்* 4 தேர்வுக்கு 75 கேள்விகள் தான் மீதம் இருக்கும் ஒன்பது பாடத் தலைப்புகளில் இருந்து கேட்க வேண்டும் என்றால்... ஒரு பாடத்திற்கு எத்தனை கேள்விகள் கேட்க வேண்டி உள்ளது 75 /9 செய்தால் சராசரியாக கேட்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை உங்களுக்கு கிடைத்துவிடும்.

***8 முதல் 9 கேள்விகள்*** ஒரு பாடத்திற்கு டிஎன்பிஎஸ்சி மாணவர்களுக்கு கேட்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். இப்போதுதான் மாணவர்கள் மிகவும் கவனமாக

- தெரிந்து கொள்ள
- அறிந்து கொள்ள
- உணர்ந்து கொள்ள

வேண்டிய விஷயம் வருகிறது. நாம் முன்பே சொன்னது போல் ஒரு பாடத்திட்டத்தில் 20 உத்தலைப்புகள் உள்ளன என்பதனை பார்த்து ***ஒரு மாணவனின் வெற்றியை எது தீர்மானிக்கிறது என்றால்.... அவன் தேர்விற்கு வரப் போகின்ற உத்தழைப்புகளை படித்து இருப்பான் என்றார் அவனுடைய தேர்ச்சி எளிமையாக இருக்கும்***

**எடுத்துக்காட்டாக**

ஒரு மாணவன் அலகு நான்கு என்று சொல்லக்கூடிய ***இந்திய வரலாறு பாடத்திட்டத்தில்*** உள்ள தலைப்புகளில் அனைத்து தலைப்புகளிலும் நன்கு கற்று இருந்தால் .அந்தப் பாடத் திட்டத்தில் இருந்து வரும் கேள்விகள் ஆன 8 முதல் 9 கேள்விகள் அந்த மாணவர்களால் சரியாக சொல்ல முடியும்.

*(ஏனென்றால் 20 தலைப்புகளும் அந்த மாணவனுக்கு அறிந்து வைத்திருப்பதனால் அந்த பாடத்திட்டத்தில் இருந்து எந்த தலைப்பில் இருந்து கேள்விகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ளக்கூடிய வகையில் அவர் பயிற்சியினை செய்துள்ளார் என்பதனையே நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்)*

**எடுத்துக்காட்டாக**

இந்திய வரலாறு பாடத்திட்டத்தினை பார்த்தோம் என்று சொன்னால் மாணவர்கள் தங்களுடைய தேர்வுக்கு தயாராகும் போது, அந்தப் பாடத்திட்டத்தில் இருக்கக்கூடிய உத்தலைப்புகளை சரிவர பார்த்தது கூட கிடையாது என்பதுதான் நிதர்சமானமான உண்மை.

அப்போது அந்தப் பாடத்திட்டத்தில் இருந்து வரக்கூடிய எட்டு வினாக்களில் அந்த மாணவருக்கு ஆறு தலைப்புகளில் மட்டுமே போதிய அனுபவமும், போதிய பயிற்சியும் இருக்கும் என்று சொன்னாள் அவர் அந்த எட்டு வினாக்களுக்கு சரியாக பதில் சொல்லக்கூடிய விகிதாச்சாரம் குறைந்து கொண்டே வரும் என்பதே உண்மை ஒரு பாடத்திட்டத்திலேயே இந்த அளவு மதிப்பெண்கள் ஒரு மாணவனால் எடுக்க முடியும் அந்தப் பாடத்திட்டத்தின் தெளிவும் அறிவும் அந்த உத்தலைப்புகள் உள்ள கணக்கும் ஒரு மாணவன் அறிந்து இருக்காத வேளையில் அவனுடைய மதிப்பெண்கள் குறைந்து கொண்டே வரும்.

ஒரு பாடத் தலைப்பிலும் இருக்கக்கூடிய அனைத்து உத்தலைப்புக ளையும் முழுமையாக படிக்க வேண்டியது இல்லை ஏனென்றால் டிஎன்பிஎஸ்சி அனைத்து உத்தலைப்புகள் இருந்தும் கேள்விகளை கேட்பதும் இல்லை ஆனால் தேர்வுக்கு கண்டிப்பாக வரக்கூடிய தலைப்பு என்பது கட்டாயம் வருடா வருடம் வந்து கொண்டு தான் இருக்கிறது ***ஆக மாணவர்கள் அந்த தலைப்புகளை சரிவர அறிந்திருக்கும் போது மதிப்பெண்கள் மாணவர்களுக்கு எளிதாக கிடைக்கும் என்பதுதான் நாங்கள் அறிந்திருக்கும் ஓர் உண்மை***

மாணவர்களுக்கு சற்று கடினமாக இருக்கக்கூடிய 2 பாட தலைப்புகளை எது என்று நாம் ஆராய்ந்து பார்த்ததில் ***நடப்பு நிகழ்வுகள் பாட அறிவியல் பாட தலைப்பு மாணவர்கள் சரிவர தயார் செய்வது இல்லை*** என்பது தான் உண்மை இதற்கு காரணம் சமூக வலைதளங்களில் வரும் ஏமாற்று கருத்துகள் தான் என்பது சொல்லி தெரிய தேவை இல்லை.

75 வினாக்கள் பொது அறிவுத் தாளில் மீதமிருக்கும் ஒன்பது தலைப்புகளில் இருந்து வரும் என்ற உண்மை ஒரு மாணவனுக்கு உணர்த்தப்பட்டு இருக்கும் என்றால் ***அந்த மாணவன் கண்டிப்பாக இந்திய வரலாறையும் நடப்பு நிகழ்வுகளையும் அறிவியல் பாடத் தலைப்புகளையும் விட்டுவிட்டு தேர்வு அறைக்கு சென்று இருக்க வாய்ப்பே இல்லை*** எனினும் மாணவர்கள் அவ்வாறு தேர்வு அறைக்கு ஒரு பாட தலைப்பினை போதிய அளவுக்கு பயிற்சியின்றி செல்கிறார் என்றால் அந்த மாணவன் சரியான வகையில் கற்பிக்கப்படவில்லை தேர்வுக்கு தேவையான நுணுக்கங்களும் கணக்குகளும் அந்த மாணவனுக்கு புரியும்படி சொல்லிக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை

ஒரு பாடத்திட்டத்தில் மூன்று கேள்விகள் தவறாக ஒரு மாணவன் எழுதுகிறான் என்று எடுத்துக் கொண்டால், முப்பது கேள்விகள் ஒரு மாணவன் தவறாக விடையளிக்க வாய்ப்பு உண்டு பொது அறிவு தாளில் மட்டும் 30 கேள்விகள் தவறாக பதில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்வுக்கூட படதற்றில் தெரிந்த கேள்விகளில் சில தவறுகள் நடக்கக்கூடும் என்ற ***பொது தவறு விகிதாச்சாரத்தையும்*** நாம் எடுத்துக் கொண்டால் 8 முதல் 10 கேள்விகள் ஒரு மாணவன் தெரிந்த கேள்விகளை ஒரு தேர்வில் தவறாக குறித்து விட்டு வருவதாக புள்ளிவிவரங்கள் நமக்கு கிடைக்கின்றன. பயிற்சி தேர்விலும் இந்த தவறினை நீங்கள் செய்திருக்க வாய்ப்பு நிறைய உண்டு ஆக

1. *முப்பது கேள்விகள் மொத்தமாக தவறாகவும்*
2. *பொது தவறில் 10 கேள்விகள் தவறாக விடை அளித்தும்*
3. *ஒன்று இரண்டு பாட தலைப்புகளில் வந்த கேள்விகள் எதுவுமே தெரியாம இருக்கும் சூழ்நிலையில் நீ*ங்கள் தேர்வில் தேர்ச்சி பெறுவது என்பது முடியாத காரியம் என்று தான் சொல்ல வேண்டும்

ஒரு தேர்வில் தேர்ச்சி பெற பாடத் திட்டத்தினை நாம் படிப்பது எந்த வகையில் முக்கியமோ! அதே வகையில் பாடத்திட்டத்தில் உள்ள உத்தலைப்புகளும் சரியாக நமக்கு புரியும்படி விளக்கப்பட்டுள்ளனவா என்பதையும் நாம் ஆராய வேண்டும் ***உங்களின் யோசனைக்காக மூன்று கேள்விகள் கீழே முன்மொழியப்படுகின்றன*** அந்த கேள்விகளை உங்கள் நண்பர்கள் கூட விவாதிக்கலாம் முன்பே பயிற்சி பெற்று தேர்வினை எதிர்கொண்ட மாணவர்களிடம் நீங்கள் இத்தலைப்புகளை பற்றிய விவாதங்களை மேற்கொள்ளலாம் நீங்கள் ஒரு விஷயத்தை அறிந்து தெளிந்து புரிந்து நடைமுறைப்படுத்தினால் வெற்றி உங்களுக்கு மிக அருகில் வரும் என்பதுதான் உண்மை

1. *முப்பது கேள்விகள் மொத்தமாக தவறாகவும்*

2. *பொது தவறில் 10 கேள்விகள் தவறாக விடை அளித்தும்*
3. *ஒன்று இரண்டு பாட தலைப்புகளில் வந்த கேள்விகள் எதுவுமே தெரியாம இருக்கும் சூழ்நிலையில்* தேர்வில் தேர்ச்சி பெற முடியுமா ?

## தேர்வில் வெற்றி பெற எது முக்கியம்

டிஎன்பிஎஸ்சி தேர்வு தன் தரத்தினை உயர்த்திக் கொண்டே வந்தபோது மாணவர்கள் மத்தியில் ஒரு குழப்பம் நிலவி வந்ததையும் நம்முடைய அகடாமி அறிந்திருந்தது. TNPSC பாட தலைப்புகளில் உள்ள உத்தலைப்புகளை மாணவர்கள் பயிற்சி செய்யும் போதும் அவர்களுக்கு தோன்றிய மூன்று கேள்விகள் .

**தெளிவாக சொல்வதானால்**

1. *மனப்பாடம் செய்தால் வெற்றி பெற முடியுமா?*
2. *புரிந்து கொண்டு படித்தால் வெற்றி பெற முடியுமா*
3. *நன்கு ஆழ்ந்து வடித்து அனைத்து பாடப்பகுதியில் இருந்தும் அறிவினை வளர்த்துக் கொண்டு தேர்வினை எதிர்கொண்டால் வெற்றி பெற முடியுமா* என்பது தான் அந்த மூன்று குழப்பங்களும்..

***இதற்கு பதில் சொல்வது என்றால்***...

***நீங்கள் டிஎன்பிஎஸ்சியால் கேட்கப்படும் கேள்விகளை ஆராய்ச்சி செய்தல் வேண்டும் எந்த மாணவன் தேர்வில் தேர்ச்சி பெறுவான் என்று சொன்னால் இந்த மூன்று படிநிலைகளையும் கடந்த ஒரு மாணவனால் மட்டுமே தேர்வினை வெற்றி கொள்ள முடியும் மனப்பாடமும் செய்ய வேண்டும் பாட தலைப்புகளை புரிந்து கொண்டும் படிக்க வேண்டும் ஒரு பாடத் தலைப்பில் ஆழ்ந்த அறிவினை வளர்த்துக் கொண்டும் படிக்க வேண்டும் மூன்று வகையிலும் மாணவர்கள் சிந்திக்க வேண்டும் என்று சொல்கிறோம்***

ஆனால் சமூக வலைதளத்தில் பரவி வரும் விஷயங்கள் என்னவென்றால்

1. ஒரு வரி முறையிலேயே அனைத்து பாடத்தையும் படித்து விடலாம் என்ற பிம்பம் கற்பிக்கப்படுகின்றன
2. நீ ஆழ்ந்து படிக்க வேண்டும் ஆழ்ந்து படிக்க வேண்டும் என்று சொல்லி ஒரு பாடத் தலைப்பை மட்டுமே திரும்பத் திரும்ப ஒரு மாணவனுக்கு கற்றுத் தரப்படுகிறது
3. தேர்வுக்கு வரவே இல்லாத பாடத்திட்டத்தில் உள்ள தலைப்புகளை படித்து தங்கள் பொன்னான நேரத்தை வீணடித்து மாணவர்கள் தேர்வில் தோல்வியை சந்திக்கின்றனர்.

நாம் தேர்வுக்கு வெற்றி பெறும் கணக்கு என்னும் பகுதியில் ஒரு பாட தலைப்பில் இருந்து அதிகபட்சம் ஒன்பது வினாக்கள் மட்டுமே வர வாய்ப்பு இருக்கின்றது என்பதனை அறிந்த பின்பும் ,ஆழ்ந்து படிப்பேன் என்று ஒரு பாட தலைப்பை மட்டுமே படித்துக் கொண்டிருந்தாள் தேர்ச்சி பெற முடியாது என்று உங்களுக்கு புரிந்திருக்கும்.

ஒரு தேர்வில் 100 கேள்விகள், கேட்கப்படுகின்றன என்று எடுத்துக் கொள்வோம்

*அந்தக் கேள்விகளின் பகுப்பு முறை எவ்வாறு இருக்கும் எனில்*

1. **மனப்பாடம் செய்து பதில் அளிக்கும் வகையில் 30 வினாக்களும்**
2. **புரிந்து கொண்டு படித்தால் பதில் அளிக்கும் வகையில் 30 வினாக்களும்**
3. **ஆழ்ந்த அறிவு அந்த தலைப்புகளில் இருந்தால் பதில் அளிக்கக்கூடிய வகையில் 30 வினாக்களும் இடம் பெற்று இருக்கும்**
4. **மீதமுள்ள 10 கேள்விகள் ஏதாவது ஒரு வகையில் இடம் பெற்றிருக்கும்.**

இப்போது சொல்லுங்கள் ஒருவன் மனப்பாடம் செய்யும் பகுதியை மட்டும் நன்றாக படித்திருந்தால் அவர் எத்தனை மதிப்பெண் எடுப்பதற்கு வாய்ப்புண்டு 30 முதல் 40 வினாக்கள் எடுக்க வாய்ப்புண்டு

ஆனால் போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றால் அனைத்து விதமான கேள்விகளையும் பதிலளிக்க கூடிய வகையில் ஒரு மாணவன் பயிற்சியினை பெற்றால் மட்டுமே தேர்வினை தேர்ச்சி பெறுதல் எளிது ஆக

1. **மனப்பாடம் செய்து விடை அளிக்கக்கூடிய கேள்விக்கும் மாணவன் பயிற்சி செய்திருக்க வேண்டும் மனப்பாடம் செய்யக் கூடிய பக்குவமும் ஒரு மாணவனுக்கு இருக்க வேண்டும்**
2. **புரிந்துகொண்டு அந்த கேள்விக்கு பதில் அளிக்க கூடிய வகையில் மாணவன் பயிற்சி பெற்று இருக்க வேண்டும்**
3. **ஒரு பாடத்தினை புரிந்து கொள்ளும் வயாகில் மாணவனுக்கு எடுத்துரைத்திருக்கவும் வேண்டும்**
4. **இரு வேறு தலைப்புகளை ஒன்றுப்படுத்தி அதனை ஆழ்ந்து புரிந்து கொண்டு கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் ஒரு மாணவன் பயிற்சியும் செய்திருக்க வேண்டும் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்**

தங்களின் புரிதலுக்காக ஒருவனுக்கு கல்வி முக்கியமா செல்வ முக்கியமா வீரம் முக்கியமா என்ற கேள்வி எழுப்பப்படுமாயின் உங்கள் பதில் என்னவாக இருக்கும் ஒருவனுக்கு அந்தந்த நேரத்தில் அந்தந்த விதமான தகுதிகள் பெற்று இருக்க வேண்டும் கல்வி கற்க வேண்டிய நேரத்தில் கல்வியினை கற்று இருக்க வேண்டும் பொருள் ஈட்ட வேண்டிய நேரத்தில் செல்வம் சேர்த்திருக்க வேண்டும் தன்னை பாதுகாக்க தன்னைச் சார்ந்தவர்களை பாதுகாக்க தேவைப்படும் நேரங்களில் வீரத்தினை வெளி காட்டி இருக்க வேண்டும் இதனை நாம் தேர்வுக்கு எடுத்துக் கொண்டால் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி

1. **மனப்பாடம் செய்தலும் வேண்டும்**
2. **புரிந்து கொண்டு படித்ததும் வேண்டும்**
3. **ஆழ்ந்து சிந்தித்து புரிந்து கொள்ளக் கூடிய திறனும் வேண்டும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்**

இந்த மூன்றும் உங்களுக்கு மிக எளிதாக கற்றுத் தரக்கூடிய வகையில் நம் பயிற்சிமுறை உள்ளது. இனிவரும் பக்கங்களில் எப்படி இந்த மூன்று திறங்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதனை பற்றி விரிவாகக் காணோம்

## எச்சரிக்கை பக்கங்கள்-1

மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்று நம் முன்னோர்கள் சொல்லி இருப்பதை நீங்கள் தற்போது மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் தேர்வுக்கு பயிற்சி அளித்தல் என்பது தற்போதைய சூழ்நிலையில் சமூக வலைதளங்கள் உதவியாலும் மாணவர்களுக்கு எளிதாக கிடைக்கின்றன ஆனால் அதில் எச்சரிக்கை உணர்வும் நீங்கள் கொண்டிருத்தல் வேண்டும். என்பதனை இந்த பகுதியில் நீங்கள் கற்க இருப்பது. ஒரு பயிற்சியினை ஒருவர் வழங்குகின்றார் என்றால் அவருக்கு

1. அந்தத் தேர்வினில் போதிய நுணுக்கங்களை கற்று உள்ளவரா என்பது முதலில் தெரிய வேண்டும்.
2. அவர் அந்த தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்கிறாரா என்பதும் முக்கியமாக விஷயம்

ஒரு பாட தலைப்பில் எத்தனை வினாக்கள் வரும் என்று சொல்வது எளிது. பொதுவாக அனைவராலும் சொல்லக்கூடியது தான் ஆனால் அந்தப் பாடத் தலைப்பில் உள்ள 20 உத்தலைப்புகளில் எந்த தலைப்புகள் மிகவும் முக்கியமானவை எந்த தலைப்புகளில் இருந்து டிஎன்பிஎஸ்சி கேள்விகள் கேட்பதில்லை எந்த தலைப்புகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படலாம் இப்போது டிஎன்பிஎஸ்சி கேட்கக்கூடிய வினாக்கள் எந்த தலைப்புகளில் இருந்து வருகின்றன என்ற தெளிவு பயிற்சியினை அளிப்பவருக்கு இருக்கின்றனவா? என்பதனை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்

<u>**மாணவர்கள் பொதுவாக கீழ்கண்ட தவறுகளை செய்கின்றனர்**</u>

1. *ஊக்கமூட்டும் பேச்சியினை கேட்டும்*
2. *அனைத்துப் பாடத் தலைப்பையும் ஷார்ட்கட்டுகளிலே முடித்து விடுவேன் என்று சொல்வதையும்*
3. *தேர்வு எழுதிப் பாருங்கள் தேர்வு எழுதிப் பார்த்தால் தான் வெற்றி என பெற முடியும் என்று அந்த தலைப்புகளில் இருந்து டிஎன்பிஎஸ்சி வினாக்கள் கேட்பார்களா என்று கூட தெரியாமல் தேர்வினை நடத்து வதும்*
4. *அந்த நபரை பிடித்திருப்பது என்ற ஒரே காரணத்தினால் அவர் நடத்தும் ஒரே பாடத்திட்டத்தினை படித்துக் கொண்டு இருப்பதும் அந்தப் பாடத்திட்டத்தினை பற்றி சமூக வலைதளங்களில் தேடிக் கொண்டிருப்பதும் உங்களை தேர்வில் தோல்வியை நோக்கி இட்டுச் செல்லும்.*

அனைத்து மாணவர்களுக்கும் புரிவதற்காக...

**<u>ஒரு உதாரணம்</u>**

இந்திய கிரிக்கெட் அணியில் தலைவராக இருந்த மகேந்திர சிங் தோனி இந்தியாவிற்கு பல கோப்பைகளை பெற்று தந்துள்ளார் என்பது நீங்கள் அறிந்தது அவருக்கு வெற்றியினை பெறக்கூடிய கணக்கு மிக தெளிவாக தெரிந்து இருந்த காரணத்தினால் மட்டுமே வெற்றியினை அவர் பெற்று தந்தார் அந்த வெற்றி கணக்கினை பற்றி அறிந்துகொள்ள 120 பந்துகளில் 200 ரன்கள் அடிக்க வேண்டிய சூழ்நிலையில் இந்திய அணி தலைவர் சக வீரர்களுக்கு செல்லக்கூடிய ஒரு விஷயம் என்னவென்றால் ஒரு ஓவரின் ஒரு பவுண்டரிகள் வர வேண்டும். ***ஒரு பவுண்டரி என்பது நான்கு ரன்னாக இருக்கலாம் அல்லது ஆறு ரன்னாக இருக்கலாம் ஆக 20 ஓவரில் 20 * 6 ரன்கள் என்று எடுத்துக் கொள்வோம் வெறும் 20 பந்துகளில் 120 ரன்கள் அணிக்கு வந்தாயிற்று மீதம் செய்ய வேண்டியது என்ன 100 பந்துகளில் 80 ரன்கள் ஓடியெடுக்க வேண்டும் இன்றைய காலகட்டத்தில் 100 பந்துகளில் 80 ரன்கள் என்பது எளிமையாக எடுத்து விட முடியும் இதுதான் வெற்றி கணக்கு***.

இந்த வெற்றி கணக்கினை நீங்கள் தேர்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் ஆனால்

1. *இந்த வெற்றி கணக்கு உங்களுக்கு கற்பிக்கப்படுகின்றனவா?*
2. *வெற்றிக் கணக்கினை கற்றுக்கொள்ள உங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றனவா ??*

என்று கேட்டால் தற்போது உள்ள சமூக வலைதளங்களில் அதற்கு மிக அரிதான வாய்ப்பே உள்ளது என்பதனை சொல்லியே ஆக வேண்டி உள்ளது

*(இதனை நீங்கள் தேர்வில் சந்தித்திருக்கலாம் சரியானது எது தவறானது எது என்று கேட்கக்கூடிய வினாக்களை நாம் வினாக்களை தவறாக படித்து அந்த வினாக்களுக்கு பதிலும் அளித்திருப்போம் இதனை உங்களுக்கு நினைவு படுத்தவே இந்த கேள்வியினை உங்கள் முன் வைத்தோம்)*

எனவே கிரிக்கெட் உலகில் மிகவும் வெற்றி கேப்டனாக வலம் வந்த மகேந்திர சிங் தோனியின் வெற்றிக்கணக்கும் சரி மட்டை பந்தில் சச்சின் டெண்டுல்கர் நிகழ்த்திய வரலாறும் சரி இந்திய அளவில் இடது கை வந்து வீச்சாளரான ஜாகிர் கான் சாதித்த சாதனைகளும் சரி அவர்கள்

1. **<u>வெற்றியை எவ்வாறு பெற வேண்டும் என்ற கணக்கினை அறிந்தும்</u>**
2. **<u>அந்த இலக்கினை அடைய பயிற்சி</u>**

3. தெளிவான அணுகுமுறையையும்
4. அந்த வெற்றிக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய பயிற்சியாளர்களையும் உடன் வைத்திருந்தது தான் காரணம் என்றால் அது மிகையாகாது

## எச்சரிக்கை பக்கங்கள்-2

நீங்கள் போட்டித் தேர்வுக்கு தயார் செய்கின்றீர்கள் என்று வைத்துக் கொண்டால் உங்களிடம் பல நபர்கள் கேள்விகளை கேட்பார்.

***உதாரணமாக***

எனக்கு நடந்த ஒரு நிகழ்வினை இங்கே பகிர்ந்து கொள்ளும்போது உங்களுக்கு ஏற்பட்ட ஒரு நிகழ்வினையும் நீங்கள் தொடர்பு படுத்திக் கொள்ள எளிமையாக இருக்கும்.

2013 ஆம் ஆண்டு போட்டித் தேர்வுக்கான பயிற்சியினை நான் பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் நான் போட்டி தேர்வுக்கு தயாராகிறேன் என்று தெரிந்து கொண்ட என் ஊரில் இருக்கும் நபரில் ஒருவர் என்னிடம் ***1979 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தொழில்துறை அமைச்சராக யார் இருந்தார் என்று தெரியுமா***? என்று என்னிடம் கேள்வியை கேட்டார்

நீங்களே சொல்லுங்கள் டி என் பி எஸ் சி இந்த மாதிரியான ஒரு கேள்வியினை கேட்க வாய்ப்பு உள்ளதா? ***டிஎன்பிஎஸ்சி புரிந்து கொண்டு படிக்கும் ஒரு மாணவன் 100% உறுதியாக சொல்வான் இப்படியான கேள்விகள் டிஎன்பிஎஸ்சியால் கேட்கப்படாது*** என்று ஆனால் நம் மாணவர்களோ சமூக வலைதளங்களில் இந்த மாதிரியான பயிற்சியினை பெறுகிறார்கள் என்பது வேதனை தரும் விஷயம்

*குரூப் 1 முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற வெற்றி கணக்கு வேறு மாதிரி இருக்கும்*
*குரூப் 2 முதல் நிலை தேர்வு தேர்ச்சி பெற்று முதன்மை தேர்வுக்கு செல்ல வெற்றி கணக்கு வேறு மாதிரி இருக்கும்*
*குரூப் 4 என்று சொல்லப்படும் தேர்வில் வெற்றி பெற வெற்றி கணக்கு வேறு மாதிரியானதாக இருக்கும்*

ஒரு தேர்வுக்கு பயிற்சி செய்யும் ஒரு நபர் அந்த தேர்வுக்கு என்ன தேவையோ அதை செய்து தேர்வினை எதிர்கொண்டு தேர்ச்சியினை பெற முயற்சி செய்ய வேண்டும் ஒரு தேர்வினை மற்றொரு தேர்வோடு குழப்பிக் கொள்ளக் கூடாது ஏனென்றால் வெற்றி வாய்ப்பு ஒவ்வொரு தேர்விற்கும் தனியாக

நிர்ணயிக்கப்படுகின்றது அந்த வெற்றி வாய்ப்பினை சரியான பயிற்சி எனும் மூலம் நீங்கள் உங்களின் வெற்றிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்

- குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற மாணவன் இரண்டு பாட தலைப்புகளை கூட விட்டுவிட்டு தேர்வுக்கு செல்லலாம்
- குரூப் 2 தேர்வில் தேர்ச்சி பெற ஒரு மாணவன் ஒரு பாடத் தலைப்பினை விட்டு விட்டு தேர்வுக்கு செல்லலாம்

*(இந்த இரண்டு தேர்வுகளும் முதல் நிலை தேர்வுகள் என்பதால் இரண்டு பாடதலைப்புகளை விட்டால் கூட அவனுடைய தேர்ச்சி இணை எந்த விதத்திலும் பாதிக்காது ஆனால் தொகுதி ஒன்றுக்கு தயாரான மாணவன் அதே நிலையில் தொகுதி 2 தேர்வுக்கு சென்றால் வெற்றி பெறுவான் என்று சொல்வதற்கு வாய்ப்புகள் குறைவு தொகுதி 2 தேர்வுக்கு அதற்குரிய முறையில் பயிற்சி யினை பெற்றிருத்தல் வேண்டும்)*

**குரூப் 4 தேர்வில் வெற்றி பெற**

1. அனைத்து பாடத் தலைப்புகளையும் அறிந்திருத்தல் வேண்டும்
2. அனைத்து பாடத்திட்டத்தையும் படிக்க போதிய நேரமில்லை என்றால்
3. தேர்வினில் தவறுகள் செய்யும் சதவித்தை குறைத்து இருக்க பயிற்சி செய்திருக்க வேண்டும்
4. ஒரு பாடத்திட்டத்தில் உள்ள உத்தலைப்புகளில் முக்கியமானது எது கேட்கப்படலாம் என்ற வாய்ப்புள்ள
5. உத்தலைப்பு எது டிஎன்பிஎஸ்சியால் பொதுவாக கேட்க படாமல் இருக்கக்கூடிய ஒத்த தலைப்புகள் எது என்று மாணவர்கள் தெரிந்து கொண்டால்

குரூப் 4 தேர்வில் வெற்றி பெறுதல் எளிதுதெளிவோம் வெற்றி பெறுவோம்

## முக்கோண பயிற்சியின் முக்கியத்துவம்

*முக்கோணம் என்றால் மூன்று பக்கங்களைக் கொண்ட ஒரு திடப்பொருள் என்பது உங்கள் எண்ணத்திற்கு கொண்டு வாருங்கள்.*

**கடந்த பகுதியில் ஒரு தேர்வில் 100 வினாக்கள் கேட்கப்படும் என்றால்**

1. 30 வினாக்கள் அனைவராலும்
2. 30 வினாக்கள் ஒரு அளவு படித்தவர்களாலும்
3. 30 வினாக்கள் சரியான பயிற்சியினை பெற்ற ஒருவராலும்
4. மீதமுள்ள 10 வினாக்கள் அவர் கற்றுக் கொண்ட பாடங்களை பயன்படுத்தி விடையளிக்க கூடியதாக இருக்கும் என்பதனை பார்த்தோம்.

அந்த பகுதியில் நாம் பார்த்ததினை இந்த முக்கோணத்தின் பக்கங்களின் பொருத்திப் பார்த்தால் நாம் ஏன் முக்கோண பயிற்சி யினை பழக்கப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பது உங்களுக்குப் புரியவரும்

முக்கோணத்தில் ஒரு பகுதியில் நேரடியாக கேட்கப்படக்கூடிய கேள்விகள் இடம் பெற்றிருக்கும். இக்கேள்விக்கு பதில் அளிப்பது சற்று சுலபம் மாணவர்கள் சரியான பாடக்குறிப்புகளைக் கொண்டு பயிற்சியினை மேற்கொண்டால் இந்த வகையான கேள்விகளுக்கு நிச்சயம் சரியான பதிலை அளிக்க வாய்ப்பு உள்ளது.

இதனையும் மாணவர்கள் எளிதான கேள்வி என்று கடந்து விட முயற்சி செய்கின்றனர் ஆனால் இம்மாதிரியான கேள்விகளுக்கு தவறேதும் இல்லாமல் பதிலளிக்க போதிய பயிற்சியினை மாணவர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும் ஆகையால் தான் எளிமையான கேள்விகளில் கூட தவறான பதிலளிக்கும் பழக்கம் மாணவர்களுக்கு ஏற்படுகிறது

முக்கோணத்தின் ஒரு பக்கம் எளிமையான கேள்வி என்றாலும் முக்கோணத்தின் அடுத்த இரண்டு பக்கங்கள்

- நாம் எவ்வாறு பாடத்திட்டத்தினை உள்வாங்கி உள்ளோம்

- அந்தப் பாடத்திட்டத்திற்கு ஏற்ற பாட குறிப்புகளை எவ்வாறு பயன்படுத்தினோம்
- கேள்விகளின் தரம் டிஎன்பிஎஸ்சி கேள்வி தரத்துக்கு இருந்ததா
- கேள்வி டிஎன்பிஎஸ்சி தரத்திற்கு இருக்கும் பட்சத்தில் சரியான பயிற்சியினை மேற்கொண்டோமா
- என்பதனை பொறுத்தே அடுத்த இரண்டு முக்கோண பகுதிகளை மாணவர்கள் கடந்து வர இயலும்

முக்கோணத்தின் இரண்டாம் பக்கத்தில் உள்ள கேள்விகளாக நாங்கள் சொல்வது நீங்கள் படித்த இரண்டு தலைப்புகளில் ஒன்று சேர்த்து ஒரே கேள்வியாக வினாக்களை எழுப்புவது ***இன்னும் விளக்கமாகச் சொன்னால்*** ஒன்றாம் பக்கத்தில் இருக்கும் ஒரு பாட குறிப்பினை அதே புத்தகத்தில் 50 ஆம் பக்கம் இருக்கும் பாட குறிப்புகளில் இருந்து ஒன்றிணைத்து ஒரே கேள்வியாக உருவாக்கம் செய்து அதனை மாணவர்களிடம் கேள்வியாக எழுப்பும் போது மாணவர்கள் அதற்கு எவ்வாறு பதில் அளிக்கிறார்களோ? அதை பொறுத்து அமையும்

*இந்த இரண்டாம் முக்கோணத்தில் மாணவர்கள் செய்யும் தவறு.*

1. **இரண்டு பாட குறிப்புகளையும்ஒரே சேர படித்தும்**
2. **தன்னுடைய குறிப்புகளில் சேர்த்தும்**
3. **டிஎன்பிஎஸ்சி இந்தப் பாட தலைப்புகளில் இருந்து கேள்விகளை முன்பே கேட்டிருக்கிறார்களா**
4. **தற்போது டிஎன்பிஎஸ்சி நரைமுடைப்படுத்தும் பேட்டனில் இந்த கேள்விகள் கேட்கப்பட்டனவா**
5. **பாடத் தலைப்பிலிருந்து கேள்விகள் வருவதற்கு எவ்வளவு வாய்ப்புகள் உள்ளன**

இவை அனைத்தும் மாணவர்கள் அறிந்திருந்தால் தான் இம்மாதிரியான கேள்விகளுக்கு மாணவர்கள் சரியாக பதிலளிக்க இயலும்

*(எளிமையான கேள்விகளும் மாணவர்கள் போதிய பயிற்சியினை காரணமாக தவறாக பதில் அளிக்கும் வழக்கம் உள்ளது என்பதனை பார்த்தோம்)*

தற்போது இரண்டு பாட குறிப்புகளை சேர்த்து ஒரே கேள்வியாக கேட்கும் கேள்விகளையும் மாணவர்கள் சற்று தயக்கத்துடன் தான் எதிர்கொள்கிறார்கள், என்பதனை மாணவர்கள் சொல்ல நாங்களும் கேட்டிருக்கிறோம். ***முக்கோணத்தின் இரண்டாம் பகுதியை கடக்க சரியான பயிற்சியும் போதிய***

***பாடத்திட்டத்தின் மீதான தெளிவு பாடத்திட்டத்தினை உள்வாங்கும் திறனும் மாணவர்களுக்கு அளித்தல் வேண்டும் என்பது கட்டாயமான ஒன்று***

***முக்கோணத்தின் மூன்றாம் பகுதி என்பது***

முதல் பகுதி மற்றும் இரண்டாம் பகுதியில் இருந்தும் சற்றே வெளியேறி தெரிந்த தகவலை வைத்துக்கொண்டு வினாவினில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கு சரியான விடையை நோக்கிச் செல்லுதல் என்பதாகும்.

இம்மாதிரியான கேள்விகளில்தான் *முக்கோணத்தின் மூன்றாம் பகுதி*

1. **காரணம் கூற்று**
2. **எது தவறானது**
3. **எது சரியானது**
4. **கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் பொருந்தக்கூடியது**
5. **எது மிகவும் பொருந்தக்கூடியது**

மாணவர்கள் இம்மாதிரியான கேள்விகளுக்கு தவறாக பதில் அளிக்கும் பழக்கம் உள்ளது

*முக்கோணத்தில் உள்ள மூன்று பகுதியையும் மாணவர்கள் சரியாகப் பயிற்சி செய்ய என்ன வழியில் மாணவர்கள் பயிற்சி செய்யலாம் என்பதனை பார்ப்போம்*

தன்னிடம் உள்ள பாட குறிப்புகளையோ அல்லது தனக்கு வழங்கப்பட்ட பாட குறிப்புகளையோ கொண்டு மாணவர்கள் தேர்வுக்கு தயாராவது.

***முதல் வகை மாணவர்கள்***

இந்த முதல் வகையால் முக்கோணத்தின் பகுதியை மட்டுமே நாம் சரிவர செய்ய இயலும்

***இரண்டாவது வகை மாணவர்கள்***

தனக்கு வழங்கப்பட்ட பாட குறிப்புகளைக் கொண்டு தானும் தானாக பாட குறிப்புகளை எடுத்துக்கொண்டு ஒரு பாடத்திட்டத்தில் உள்ள பாடத் தலைப்புகளை சற்று ஆழமாகவும், யோசித்தும் படித்து வேறு வேறு பக்கங்களில் தரப்பட்ட பாடக்குறிப்புகளை ஒன்று சேர , ஒரே பாட குறிப்பாக மாற்றி பயிற்சி செய்யும் மாணவர்கள் இரண்டாவது முக்கோணத்தில் உள்ள கேள்விகளை எதிர்கொள்ளும் வகையில் தயார் செய்கிறார்கள் அவர்களின் இந்த பயிற்சி முக்கோணத்தின் இரண்டாம் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியான பதில் அளிக்கும் திறனை அவர்களுக்கு பெற்று தருகிறது

***<u>மூன்றாவது வகை மாணவர்கள்</u>***

நமக்கு கற்றுத் தரப்படும் பாடங்களில் ஆசிரியர் சொல்லும் குறிப்புகளை தன்னுடைய குறிப்புகளிலும் தனக்கு வழங்கப்பட்ட பாடக்குறிப்புகளிலும் இணைத்து தெரிந்த பகுதியில் இருந்து கேட்கப்படும் கடினமான வினாக்களுக்கு பதிலளிக்கும் வண்ணம் தங்களுடைய பயிற்சிகளை செழுமைப்படுத்தியும் டிஎன்பிஎஸ்சி எதிர்நோக்கும் அல்லது எதிர்பார்க்கும் பண்புகளுக்கு எத்தாற்போல் தங்களை தகவமைத்துக் கொள்கின்றனர்

***<u>மேல் சொன்ன மூன்று வகையும் மாணவர்கள் பொதுவாக பயிற்சி செய்யும் முறைகளை விளக்கிச் சொல்லி உள்ளோம்</u>***.

மாணவர்கள் பயிற்சி செய்ய உள்ள முறைகள் என நாம் பட்டியல் இடுவது

1. ***பாடக்குறிப்புகளைக் கொண்டு தேர்வுக்கு பயிற்சி செய்வது***
2. ***பாடக்குறிப்புகளையும் சேர்த்து தானாக தனி பாட குறிப்புகளை தயார் செய்து அதன் மூலம் தேர்வுக்கு பயிற்சி செய்வது***
3. ***பாடக்குறிப்புகளையும் கொண்டு பாடக் குறிப்புகளை தானாக எவ்வாறு எடுக்க வேண்டும் என்பதனை பயிற்சி***
4. ***டிஎன்பிஎஸ்சியால் கொடுக்கப்பட்டுள்ள பாட தலைப்புகளில் எந்தெந்த பாடத் தலைப்புகள் முக்கியம்.***
5. ***எந்த பாடத் தலைப்புகள் மிகவும் முக்கியம். எந்த பாடத் தலைப்பிலிருந்து கேள்விகள் கண்டிப்பாக வரும் என்பதனையும்***
6. ***டிஎன்பிஎஸ்சி இத்தலைப்புகளில் கேள்வி கேட்கின்றாரா***
7. ***டிஎன்பிஎஸ்சி அவ்வாறு இத்தலைப்புகளிலிருந்து கேள்விகளை கேட்பார்கள் என்றால்***

8. *அது எளிமையான கேள்வியாக இருக்குமா*
9. *கடினமான கேள்வியாக இருக்குமா*
10. *முக்கோணத்தின் மூன்றாம் பக்கத்தில் உள்ள கேள்விகளில் போல் தெரிந்ததிலிருந்து தெரியாததை அனுபவம் முறையில் இருக்குமா என்று*

பயிற்சியினை பெற்றால் மாணவர்கள் கண்டிப்பாக தேர்வினை தேர்ச்சி பெற முடியும் என்பது தான் உண்மை

**இந்த வழிமுறையை உங்கள் மனதில் பதிய வைக்கவே முக்கோண முயற்சி என்று இந்த பயிற்சிக்கு நாம் பெயரிட்டு உள்ளோம்**

முக்கோணங்களில் உள்ள மூன்று பகுதிகளையும் சரியாக அணுக நாம் மூன்று முறையான பயிற்சிகளையும் பெற்று அல்லது மூன்று முறைகளையும் ஒன்றே சேர்த்த மூன்றாவது பயிற்சி முறையினை நாம் தேர்ந்தெடுத்தால் வெற்றி நமக்கு எளிதாக கிட்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை வெற்றிக்கான முயற்சியில் தொடர்ந்து பயணிப்போம்

**புரிந்து கொள்ள ! அறிந்து கொள்ள ! தெரிந்து கொள்ள ! தெளிவு அடைய !**

நாம் ஒரு தேர்வுக்கு பயிற்சி பெறுகிறோம் என்றால்...

1. *அந்தத் தேர்விற்கு எப்படி படிக்க தொடங்குவது*
2. *எவ்வாறு தேர்வு வரும் வரை அந்த தேர்வுக்கு பயிற்சியினை செய்வது*
3. *தேர்வு நாளில் எந்தவித பதட்டமும் இன்றி வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்*
4. *தேர்வுக்கு பின் அமைதியாகவும்*
5. *தேர்ச்சி பெற்ற பின் எவ்வாறு அந்த பணியினைச் செய்தல் வேண்டும்*

என்பதனையும் தெளிவாக ஒரு மாணவர் அறிந்திருக்க வேண்டும்

ஒரு தேர்வுக்கு தயாரான ஒரு மாணவன் அத்தேர்வினால் பிற தேர்வுகளையும் எதிர்கொள்ள முடியும் என்று பொது புத்தியில் பயணிப்பார் என்றால்

***அவரால் பிற தேர்வுகளில் அவர் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் இருக்காது என்பதனை மாணவர்கள் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்***

தொகுதி 1 தொகுதி 2 தொகுதி 4 என மூன்று தேர்வுக்கு ஒரே பாட தலைப்புகள் என்றாலும்

- ***அந்த தேர்வினில் டி என்பிஎஸ்சி என்ன எதிர்பார்க்கிறார்கள்***
- ***அந்த தேர்வுக்கு மாணவர்களின் பயிற்சி முறை எந்த ஆழத்திற்கு இருக்க வேண்டும்***
- ***அத்தேர்வினை எதிர்கொள்ளும் மொத்த மாணவர்களில் தேர்ச்சி பெற நாம் என்ன செய்ய வேண்டும்***

என்பதனை முன்புள்ள தலைப்புகளில் தெளிவாக பார்த்து இருந்தாலும்

***கீழ்க்கண்ட உதாரணங்கள்***

நீங்கள் ஒரு தேர்வுக்கு உங்களால் முடிந்த 100 சதவீத முயற்சியையும் செய்தால் மட்டுமே வெல்ல முடியுமே தவிர ஒரு தேர்வினை மேற்புல்லாக தெரிந்து கொண்டு அடுத்த தேர்வினில் கேட்கப்படும் கேள்விகளை அவ்வளவு எளிதாக சரியான விடையினை அடைதல் சுலபம் இல்லை என்பதனை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்

இதன்மூலம் தேர்வு என்றாலே கடினமாக இருக்கும் என்று நாம் சொல்ல முனையவில்லை ஆனால்

1. **ஒரு தேர்வுக்கு என்ன வேண்டுமோ**
2. **அந்தத் தேர்விற்கு தேவையான பயிற்சியினையும்**
3. **பயிற்சி முறையினையும்**
4. **அந்தத் தேர்வு எதிர்பார்க்கும் சிறப்பு அம்சங்களையும்**
5. **அந்த தேர்வில் கேட்கப்படும் கேள்விகளின் தரத்தையும்**
6. **கேள்வி கேட்கப்படும் பாடத் தலைப்புகளின் விகிதாச்சாரத்தையும் அறிந்து கொண்டால்**

நீங்கள் தேர்ச்சி அடைய போதுமான வலி உங்களுக்கு எளிமையாக இருக்கும் என்பதனை சொல்லவே பத்தியின் முயற்சி.

தொகுதி 1 பாடத் தலைப்புகளுக்கு என்ன தேவை என்றால் பொது அறிவு பாடத்திட்டத்தில் நீங்கள் ஆழமான அறிவினை பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

மாணவர்கள் செய்வது என்னவென்றால் கல்லூரிப்படிப்பு தரமுடைய ஒரு கேள்விக்கு பள்ளி பாட புத்தகத்தில் இருந்தே விடை அளிக்க முடியும் என்று நம்புவது சற்று நெருடல் ஆகவே உள்ளது.

நாம் முக்கோண பயிற்சியின் மூலம் ஒரு தேர்வில் எளிமையான கேள்விகள் வரும் அவ்வாறு எளிமையாக உள்ள கேள்விகளை கல்லூரி தரத்தில் கேட்கப்பட்ட கேள்விகல் இருந்தாலும் பள்ளிப் பாட புத்தகத்தில் கொண்ட தகவல்கள் மூலம் கேள்விகளை எதிர்கொண்டு சரியான விடையினை அடைதல் சுலபம் ஆனால் இது கல்லூரி படிப்பு தரமுடிய அனைத்து கேள்விகளுக்கும் பொருந்துமா என்றால் பொருந்தாது என்பதை உணருதல் வேண்டும்.

***ஒரு வருடம் தேர்வில் பயிற்சி பெற்ற பின்னர் தான் மாணவர்கள் இதனை சரியாக அறிந்து கொண்டு தங்களுக்கு***

- ***தொகுதி 4 வேண்டுமா?***
- ***தொகுதி 2 வேண்டுமா?***
- ***தொகுதி 1 வேண்டுமா?***

***என்று முடிவு செய்கின்றனர் இதனால் மாணவர்களின் வெற்றி பெறும் சதவீதமும் உயர்ந்து வருகிறது***

ஒரு முயற்சியில் ஒரு இலக்கினை நிர்ணயித்துக் கொண்டு அந்த இலக்கினை அடைய போதுமான பயிற்சியினை மேற்கொண்டால் அந்த ஒரு இலக்கினை சுலபமாக அடைய முடியும் என்பதனை சொல்லவே நாங்கள் இதனை மீண்டும் மீண்டும் உங்களுக்கு எடுத்துரைக்கின்றோம் ஒரு தேர்வில் இருக்கக்கூடிய ஒரு தலைப்பு பிற தேர்வு பாட தலைப்புகளிலும் இடம் பெரும் என்றாலும் கேள்விகளின் தரத்தைக் கொண்டு வேறு வேறு தேர்வுக்கு வேறு வேறு பயிற்சி முறையினை ஒரு மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும் ***சமூக வலைதளங்களில் பரவி வரும் ஒன் சப்ஜெக்ட் ஆல் எக்ஸாம் என்ற முறை அனைவருக்கும் பொருந்தாது*** என்பதனை மாணவர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இக்கருத்தினை உங்களுக்கு இன்னும் அடிமையாக புரிய வைக்க இக்கருத்தினை நீங்கள் மனதில் உள்வாங்கிக் கொள்ள இரண்டு உதாரணங்களை தருகின்றோம்

இந்திய ஆடவர் கிரிக்கெட் அணியில் பல சாதனைகளை செய்த கேப்டன் என்று அனைவராலும் போற்றப்படுகின்ற மகேந்திர சிங் தோனி என்றாலும் நம்முடைய உள்ளூர் டோர்னமெண்ட் களில் அவர் கலந்து கொண்டால் எளிதாக வெற்றி பெறுவாரா என்று கேட்டால்

1. அந்த உள்ளூர் போட்டிகளில் ஆட்டம் முறைகள் எப்படி உள்ளது
2. அந்த உள்ளூரில் உள்ள ஆட்டக்காரர்களின் திறன்
3. தோனி அணியில் இடம் பெற்றுள்ள ஆட்டக்காரர்களின் திறன்
4. தோனி அந்த ஆட்டக்காரர்களை பயன்படுத்தும் முறை
5. அந்த ஆட்டத்தில் மைதானத்தில் அமைந்துள்ள வித்தியாசங்கள்

என அனைத்தும் தான் ஒரு வெற்றியை பெற்றுத் தருமே தவிர, ***தோனி என்ற ஒரு ஆட்டக்காரர் ஒரு அணியில் இருந்தால் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்புவது அவ்வளவு சாமர்த்தியமான காரியம்***

***அன்று.*** தோனி வெற்றி பெற்ற கேப்டன்களில் பிரசத்தியானவர் என்றாலும் தோனி சந்தித்த அனைத்து போட்டியுமே வெற்றி பெற்ற ஒரு போட்டியாளர் தோனி என்று சொல்வது ஏமாற்று வேலை

தேர்வினில் வெற்றியை அடைய வேண்டும் என்றால்

1. ***பயிற்சியும்***
2. ***முயற்சியும்***
3. ***நாம் முன்பே சொன்னது போல ஆட்ட நுணுக்கங்களும்***
4. ***அந்த ஆட்டத்தில் உள்ள வழிமுறைகளையும்***
5. ***சட்டதிட்டங்களும்***

நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும்.

**இந்த நுணுக்கங்களை தான் நம் பல்வேறு பகுதிகளில்**

1. வெற்றிக்கான கணக்கும் என்றும்
2. முக்கோண பயிற்சி என்றும்
3. ஒரு வினாத்தாள் எவ்வாறு வடிவமைக்கப்படுகிறது என்றும்
4. ஒரு பாடத்திட்டத்தில் இருக்கக்கூடிய குழப்பங்களும் தவறுகளும் என்ன என்றும்
5. டிஎன்பிஎஸ்சி எதிர்ப்பார்க்கும் சாத்தியக்கூறுகள் என்றும்
6. ஒரு பாடத்திட்டத்தினால் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்றும்
7. ஒரு தேர்வினால் தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் அந்த பயிற்சியினை தங்கள் பணி நாட்களில் எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்றும்

வெவ்வேறு பகுதிகளில் நாம் கண்டுள்ளோம் அதனை அனைத்தையும் ஒன்று சேர்த்து நீங்கள் ஒன்றினை புரிந்து கொள்ள வேண்டும் தேர்வினில் வெற்றி என்பது எளிதாக கிடைக்கக் கூடியதுதான் ஆனால் உங்கள் வெற்றி எளிதாக இருக்க வேண்டும் என்று சொன்னால் நீங்கள்

- **சரியான அணுகுமுறையும்**
- **சரியான வழி திட்டத்தையும்**
- **சரியான பயிற்சியையும்**
- **போதுமான முயற்சியையும்**

அத்தேர்வினில் எடுத்துக் கொண்டால் வெற்றி என்பது எளிது என்பதனை மீண்டும் ஒரு முறை சொல்லிக் கொண்டு வெற்றி பெறும் வழியினை பின் தொடர்வோம்

## அப்ப டிஎன்பிஎஸ்சி யில் வெற்றி பெற என்ன தான் செய்ய வேண்டும்

ஒரு தேர்வில் வெற்றி பெற என்னென்ன செய்ய வேண்டும்? என்பதனை ஒரு மாணவர்கள் தெரிந்து கொள்வதை விட

1. ***<u>எதனைச் செய்யக்கூடாது</u>***
2. ***<u>எந்த தவறில் தான் சிக்கி விடக்கூடாது</u>***
3. ***<u>எந்த தவறான வழிமுறையில் நாம் மாட்டிக் கொள்ளக்கூடாது</u>***
4. ***<u>தொடர்ந்த இடத்தில் இருந்து வெற்றி இலக்கினை அடைய என்ன என்ன வழி திட்டங்களை நாம் கடந்து செல்லுதல் வேண்டும்</u>***

என்பதனை ஒரு மாணவர்கள் தெளிவாக மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்

வெற்றி பெற வேண்டுமெனில் கீழ்கண்ட கட்டளைகளை நீங்கள் பின்பற்றக் கூடாது

**<u>1.. ஷார்ட்கட் என்னும் சூழ்ச்சி பின்பற்றக் கூடாது</u>**

டிஎன்பிஎஸ்சி அமைத்துள்ள பாட தலைப்புகளை நான் புரிந்து கொண்டு படிக்காமல் சமூக வலைதளத்தில் சொல்வது போல அனைத்திற்கும் ஷார்ட் கட் வைத்து ஒரு பாடத்திட்டத்தினை படித்தால் தேர்வில் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியாக பதில் அளிக்க முடியுமா என்றால் முடியாது என்பதுதான் உண்மை

**<u>2. தவறான பாட குறிப்புகளை பின்பற்றக் கூடாது</u>**

டி என் பி எஸ் சி தந்துள்ள பாட தலைப்புகளை ஒன் லைனர் என்று சொல்லக்கூடிய வகையில் அதனை ஒருவரையில் அடக்கி விட முயற்சிப்பது தேர்வினில் கேட்கப்படும் வினாக்களுக்கும் நீங்கள் பயிற்சி செய்த முறைக்கும் எதிரே துருவம் என்பதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் இவ்வாறு ஆன்லைனில் கொண்டு ஒரு தேவினை வெற்றி பெற முடியுமா என்ற கேள்விக்கு முக்கோண பயிற்சியின் முக்கியத்துவத்தை ஒரு மாணவர் தெரிந்து கொண்டாலும் ஒரு கேள்வியில் மூன்று வகையான கேள்வி தரத்தில் அடிப்படையான கேள்விகள் கேட்கப்படுகின்றன என்ற டிஎன்பிஎஸ்சி

யின் கேள்வி தாள் வினா வடிவமைப்பை தெரிந்து கொண்டாலும் இம்முறையை நீங்கள் பின்பற்றவே கூடாது என்பதனை நீங்கள் அறிவீர்கள்

3. **<u>தவறாக சொல்லிக் கொடுக்கப்படும் ஊக்க சக்தி குறிப்புகளையும் வெற்றி குறிப்புகளையும் பின்பற்றக் கூடாது</u>**

பொது மொழியில் சொன்னால் உருட்டுகிறான் என்று சொல்ல நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் தொகுதி போரில் படித்த ஒரு பாடக் குறிப்புகளை கொண்டு தொகுதி ஒன்றில் கேட்கப்படும் கேள்வியையும் நீங்கள் சரியாக விடை அளிக்க முடியும் என்று யாராவது உங்களுக்கு ஊக்கமூட்டினாலோ அவ்வாறு வெற்றி குறிப்புகளை தந்தாலோ அவர்களை சந்தேக எண்ணத்தோடு அணுகுங்கள் பாட தலைப்புகள் ஒன்று என்றாலும் சரியான பயிற்சியினை பெற்றால் ஒழிய இரண்டு கேள்விகளையும் சரியாக மற்றும் எளிதாக பெற முடியும் வினாத்தாள் ஒருபோதும் கடுமையாக கேட்கப்படுவது அன்று அவ்வினாத்தாளுக்கு பயிற்சி பெற்ற நாம் அந்த வினாத்தாளுக்கு ஏற்றவாறு பயிற்சி பெற்றிருந்தால் அனைத்து வினாத்தாளுமே எளிமையான வினாயத்தால் தான் என்பதனை நீங்கள் அறிந்திருக்க முடியும். இம்முறை பயிற்சியிணையும் நீங்கள் பின்பற்றக் கூடாது

4. **<u>போதிய அனுபவமும் இல்லாமல் பயிற்சி அளிப்பது அவர்களிடம் இருந்து பயிற்சியினை பெறுவது இதனை ஒருபோதும் செய்தல் கூடாது</u>**

போட்டித் தேர்வு என்றால் என்ன போட்டித் தேர்வு அறையில் ஓர் மாணவன் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்ன என்று ஒருவர் புரிந்து வைத்திருப்பார் என்றால் நான் முதல் சொன்ன இரண்டு கட்டளைகளையும் அவர் மாணவர்களுக்கு போதிக்க மாட்டார் ஒரு பாடத்திட்டத்தினை ஷார்ட்கட்டாக நடத்த முடியும் என்றும் அதே பாடத்திட்டத்தினை ஒரு வரி வாக்கியத்தில் கொண்டு அந்த பாடத்திட்டத்தினை முடித்து விட முடியும் என்றும் அதை கொண்டு தேர்வினில் வெற்றி பெற முடியும் என்றும் சொல்வதும் நம்ப முடியாத ஒன்று உலகிலேயே அதிக நபர்கள் எழுதும் போட்டி தேர்வாக இருக்கக்கூடிய தொகுதி போரில் கேட்கப்படும் வினாக்களுக்கு ஷார்ட்கட்டிலோ அல்லது ஒரு வரி அமைப்பு கொண்ட பாடக்குறிப்புகளை கொண்டு வெற்றி பெறுதல் சுலபம் அன்று ஆக இம்மாதிரியான பயிற்சியினை நீங்கள் பின்பற்றவே கூடாது

5. <u>**தற்போது கேட்கப்படும் கேள்விகளின் தரத்தில் இல்லாது 1990 இல் கேட்கப்பட்ட வினாத்தாள் தரத்தில் பயிற்சியினை மேற்கொள்ளுதல்**</u>

இம்மாதிரியான பயிற்சிகள் மாணவர்களுக்கு ஒரு போதும் வெற்றி வாய்ப்பினை பெற்று தராது போட்டி தேர்வு என்பது சரியாக பயிற்சி பெற்று சரியாக எதிர்பார்த்த வினாக்களுக்கு பயிற்சி பெற்ற வழியே சரியான பதில் இல்லை அளித்து பிற மாணவர்களை காட்டிலும் முன் செல்வதே போட்டி தேர்வாகும் அப்படியான போட்டித் தேர்வில் டி என் பி எஸ் சி நடப்பு ஆண்டில் பின்பற்றும் வரைமுறைகளை பின்பற்றாமல் தமக்கு தெரிந்த முறையில் பயிற்சி பெற்று டிஎன்பிஎஸ்சி கேட்கும் கேள்விகளை எதிர்கொண்டால் வெற்றி பெற முடியாது ஆகையால் இம்மாதிரியான பயிற்சிகளை நீங்கள் தேர்வினை எளிதாக வெல்ல இம்முயற்சிகளை செய்யக் கூடாது

***<u>தற்போது இந்த ஐந்து கட்டளைகளையும் படித்த நீங்கள் ஒன்றை உங்கள் மனதிற்குள் கேட்டுக் கொண்டிருப்பீர்கள்</u>*** வெற்றிக்கு தேவையான கட்டளைகளாக இந்த ஐந்தும் இல்லாத பட்சத்திலும் நான் இது நாள் வரை இந்த ஐந்து முறைகளைக் கொண்டு வெற்றி பெற முடியும் நான் எண்ணியது தவறுதான் என்று உங்களுக்கே புரிந்திருக்கும் வெற்றி வாய்ப்பினை பெற்று தர முடியாத ஒரு பயிற்சியினை முயற்சி செய்வதை காட்டிலும் வெற்றி தரக்கூடிய பயிற்சியினை இனி ஒரு மாணவன் முயற்சித்தால் தேர்வில் எளிதாக வெற்றியை அடைய முடியும்

நாம் எவ்வாறு முயற்சி செய்யக் கூடாது என்று ஐந்து கட்டளைகளை பார்த்தோம் இனி எந்த ஐந்தின் மூலம் நாம் எளிதாக வெற்றி பெற முடியும் என்பதனை காண்போம்

# அப்ப டிஎன்பிஎஸ்சி யில் வெற்றி பெற என்ன தான் செய்ய வேண்டும்(PART -2 )

***<u>டிஎன்பிஎஸ்சி தந்துள்ள பாட குறிப்புகளில் மாணவர்களுக்கு புரிதல் ஏற்படுதல் வேண்டும்</u>***

நாம் முன்பே ஒரு பகுதியில் எடுத்துரைத்தது போல் டிஎன்பிஎஸ்சி தந்துள்ள பாட குறிப்புகளில் சில தவறுகளும் ஒரு பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள தலைப்புகள் பிற பாட தலைப்புகளிலும் இணைந்து வந்துள்ளது என்றும் டிஎன்பிஎஸ்சி நடத்தும் தேர்வில் பள்ளி படிப்பு தரும் கல்லூரி படிப்பு தரம் முதல் நிலை கல்வித் தரம் என கேள்விகள் தனித்தனியே பிரித்து கேட்கப்படுகின்றன என்பதனையும் மாணவர்கள் மனதில் வைத்துக் கொண்டு டிஎன்பிஎஸ்சி பாட குறிப்புகளை புரிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற முதல் கட்டளையை மாணவர்கள் தங்களுடைய பயிற்சி முறையில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்

1. **<u>சரியான பாட குறிப்புகளை மாணவர்கள் பயன்படுத்துதல் வேண்டும்</u>**

பொதுவாக போட்டி தேர்வுக்கு மாணவர்கள் பள்ளிப் பாட புத்தகத்தையே சார்ந்து உள்ளார்கள் என்றாலும் பள்ளிப் பாட புத்தகத்தில் இருந்து பயிற்சி பெற்றால் போட்டித் தேர்வில் கேட்கப்படக்கூடிய கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியும் என்றாலும் அத்தேர்வினில் வரும் அனைத்து விதமான வினாக்களுக்கும் பதிலளிக்க பள்ளி பாட புத்தகம் ஒன்றே சரியான பாடக்குறிப்பு கிடையாது. பள்ளி பாட புத்தகத்தில் இருக்கக்கூடிய தரவுகளும் காலத்திற்கு ஏற்றார் போல் நடப்பு நிகழ்வுகளுக்கு ஏற்றால் போர் மாறி உள்ளதா என்று கேட்டால் அவ்வாறு மாறவில்லை என்பதே உண்மை

எனவே நாம் பயிற்சி செய்ய பள்ளி பாட புத்தகம் என்பது அடிப்படை புத்தகமே தவிர வெற்றியினை பெற்று தரக்கூடிய வெற்றி புத்தகம் அன்று என்பதனை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் பள்ளி புத்தகத்தை தாண்டிய அறிவும் பள்ளி புத்தகத்தை தாண்டிய தெளிவும் பள்ளி புத்தகத்தை தாண்டிய புரிதலும் பள்ளி புத்தகத்தை தாண்டிய கேள்விகளுக்கான பயிற்சியும் ஒரு மாணவன் பெற்று இருந்தால் தேர்வினை வெற்றி பெற முடியும் என்பதனை மாணவர்கள் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்

2. ***<u>ஒரு தேர்வினை வெற்றி பெற சரியான முயற்சிகளையும் சரியான வழி திட்டத்தையும் சரியான பாதையையும் மாணவர்கள் பின்பற்றுதல் வேண்டும்</u>***

   நாம் பல பகுதிகளில் சொன்னது போல்...

தொகுதி ஒன்றில் கேட்கப்படக்கூடிய கேள்விகளும் தொகுதி 2 வில் கேட்கப்படக்கூடிய கேள்விகளும் தொகுதி போரில் கேட்கப்படக்கூடிய கேள்விகளும் இதுதான் ஆனால் அந்தந்த தேர்வுக்கு அந்தந்த கேள்வி தரத்துக்கு அந்தந்த தேர்வில் டிஎன்பிஎஸ்சி எதிர்பார்க்கும் நோக்கத்திற்கு ஏதுவாக தன்னுடைய குறிப்புகளையும் பாட குறிப்புகளையும் வினா பயிற்சி எனும் நீங்கள் பெற்றோர் வீர என்பதனை முடிவு செய்து கொள்ள வேண்டும். சரியான வழிகாட்டல் சரியான வழியில் முயற்சி உங்களை சரியான வெற்றியினை பெற்று தர உதவும் என்பதனை மாணவர்கள் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்

3. ***<u>போட்டித் தேர்வில் அனுபவம் உள்ளவர்கள் போட்டித் தேர்வி</u>***ல் தன்னுடைய அணுகுமுறையின் மூலம் வெற்றி கொண்டவர்கள் என போட்டித் தேர்வில் தன்னுடைய முயற்சியையும் தன்னுடைய அனுபவத்தையும் பெற்றிருக்கும் ஒருவரால் உங்களுக்கு அவ்வாண்டில் கேட்கப்படக்கூடிய வினாக்களின் தன்மை எவ்வாறு இருக்கும் அவ்வாண்டில் கேட்கப்படக்கூடிய வினாக்களின் தரம் அவ் ஆண்டில் கேட்கப்படக்கூடிய வினா தலைப்பு என அனைத்தையும் உங்களுக்கு மாதிரி வடிவில் அளிக்க முடியும். ஆகவே சரியான வழியில் முயற்சி செய்யும்பொழுது சரியான நபர்களின் மூலமும் நீங்கள் பயிற்சி செய்வது அவசியமாகிறது

4. ***<u>டிஎன்பிஎஸ்சி தற்போது பின்பற்றும் நடைமுறைகளை</u>*** சரியாக தீர்மானித்து டிஎன்பிஎஸ்சி எதிர்கொள்ளும் மாற்றங்களையும் டிஎன்பிஎஸ்சி தன்னுல் ஏற்படுத்தும் முன்னேற்றங்களையும் அறிந்துகொண்டு டிஎன்பிஎஸ்சி தரத்தில் வடிவமைக்கப்பட்ட பாட குறிப்புகளையும் பாட தலைப்புகளையும் வினாக்களையும் பயிற்சி செய்து அப்ப பயிற்சியினை தவறுதல் இன்றி பலமுறை முயற்சி செய்து வெற்றியினை மாணவர்கள் அடைதல் வேண்டும்

இப்பகுதியின் மூலம் மாணவர்களுக்கு நாம் சொல்லிக் கொள்ள நினைப்பது பெரும்பாலான மாணவர்கள் எந்த வழிமுறையை பின்பற்றி நடந்தால் வெற்றி வராதோ அந்த வழிமுறைகளை மட்டுமே திரும்பத் திரும்ப தன்னுடைய போட்டித் தேர்வு பயிற்சியிலும் தன்னுடைய முயற்சிகளையும் நடைமுறை படுத்துகின்றனர் என்பதனை அறிந்து கொண்டே ***<u>மாணவர்கள் செய்யவே கூடாத கட்டளைகளையும், மாணவர்கள் கட்டளைகளை சரியாக செய்தால் எளிதாக கிடைக்கக்கூடிய வழிமுறைகளையும்</u>*** இப்பகுதியில் பார்த்தோம். ஒரு மாணவனின் வெற்றியை தீர்மானிக்க கூடிய பொது அறிவு பாடத்திட்டத்தினை போட்டித் தேர்வுக்கு ஏற்றார் போல் நாங்கள் மாற்றி அமைத்துள்ளோம் அதனைப் பற்றியும் இனி தெளிவாக காண்போம்

## வெற்றியின் கதையினை நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ள

மொழி அறிவு பாடத்தில் சராசரியாக ஒரு மாணவர் 90 வினாக்களுக்கு மேல் பெற வேண்டும் என்பது போட்டித் தேர்வில் இருக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் பொருந்தும் ஆனால் 90 வினாக்களுக்கு மேல் ஒரு மாணவன் பெற்றாலும் அவனுடைய வெற்றி வாய்ப்பினை தீர்மானிப்பது என்பது பொது அறிவு தான் என்பது உண்மை

நாம் கடந்த பகுதியில் டி என் பி எஸ் சி தனது வலைதளத்தில் தந்துள்ள பொது அறிவு தாளின் பாட திட்டத்தை நமக்கு ஏற்றார் போல் எவ்வாறு மாற்றிக் கொண்டோம் என்பதனை எடுத்துரைத்தோம்.

மாணவர்கள் பொதுவாக பொது அறிவு தாளினை பத்து பாடங்களாக பிரித்து அந்தப் பாடங்களுக்கு ஏற்றவாறு தங்களை தயார் செய்து வருகின்றனர்

ஆனால் வெற்றியினை உங்கள் கதையாக மாற்றிக் கொள்ள மற்றவர்கள் செய்யும் அதனையே நீங்களும் செய்தால் வெற்றி எப்படி உங்களுக்கு எளிமையாக கிடைக்கும்.

சகபோட்டியாளர் டிஎன்பிஎஸ்சி தந்துள்ள பொது அறிவு பாடத்திட்டங்களை பத்து பகுதியாக பிரித்து அவ்வாறு படிப்பதனால் டிஎன்பிஎஸ்சி கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியும் என்று பயிற்சி செய்தால் அதே பயிற்சிகளை நீங்கள் செய்தாலும் அவர் எடுக்கும் அதே முயற்சியை நீங்கள் செய்வதால் மட்டும் எவ்வாறு வெற்றியாக கிடைக்கும் என்று நம்புகிறீர்கள்?

***<u>கடந்த டிஎன்பிஎஸ்சி தேர்வுகளை அலசும் போது</u>***

டி என் பி எஸ் சி தேர்வினை எதிர்கொள்ள தனி முயற்சியும், தனி பயிற்சியையும் - ஒருவர் எதிர்கொள்ள தயங்குதல் கூடாது.

சமீபத்தில் நடந்து முடிந்த குரூப் 2 முதன்மை தேர்வில் நம் நிறுவனம் அளித்த பயிற்சியின் அடிப்படையில் மாணவர்கள் தங்களுடைய தேர்வினை எளிமையாகவும் தேர்வில் வெற்றி பெற தேவையான நுணுக்கங்களை அறிந்துகொண்டு தேர்வு அறைக்கு சென்றதாலும் டிஎன்பிஎஸ்சி எந்த தலைப்புகளில் இருந்து கேள்விகளை வடிவமைப்பார்கள்? அந்த கேள்வியின் தன்மை எவ்வாறு இருக்கும் ? என்ற அடிப்படையில் மாணவர்களுக்கு போதுமான பயிற்சியை நாம் அளித்ததாலும்

அவர்கள் முதன்மைத் தேர்வை எளிதாகவும் சிறப்பாகவும் வெற்றிக்குத் தேவையான அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி தங்களுடைய விடைத்தாளினை எழுதி உள்ளார்கள்.

முதன்மை தேர்வில் நாங்கள் செய்த ஆராய்ச்சியையும் மாணவர்களுக்கு என்ன தேவை? அவர்கள் எங்கு தடைப்பட்டு நிற்கிறார்கள் ?சரியான வழியில் செல்லாமல் வெற்றியினை அளிக்க இயலாத ஒரு பயிற்சி முறையினை மேற்கொள்வதாலும் ? அதிகமான நபர்கள் வெற்றி வாய்ப்பினை இழக்கின்றனர் என்பதனை தெரிந்து சரியான முயற்சியையும் தேர்ச்சிக்கு தேவையான பயிற்சி இணையும் டிஎன்பிஎஸ்சி தேர்வு ஆணையம் எதிர்பார்க்கும் அடிப்படையான தகவல்களையும் அரசு பணிக்கு மாணவர்கள் தயாராக பயிற்சியினை உங்களுக்கு அளித்துள்ளோம்

குரூப் 2 முதன்மை தேர்வில் நாம் நடைமுறைப்படுத்திய வெற்றி பயிற்சி என்பது தமிழ்நாட்டில் முதல் முறையாக 100% ஆன்லைனில் இயங்கக்கூடிய முதன்மை தேர்வு பயிற்சி தளத்தை அறிமுகம் செய்தோம்

மாணவர்கள் அப்பயிற்சியினை பெற்றதன் மூலம் டிஎன்பிஎஸ்சி எவ்வாறு முதன்மைத் தாளினை அறிவியல் முறை கொண்டு விடை தாளுக்கு மதிப்பெண்கள் அளிப்பார்களோ அதே முறையில் நம்முடைய மாணவர்களுக்கு விடைத்தாள்களின் மதிப்பெண்களை அளித்தோம்

ஒரு தேர்வில் மாணவன் அதிகபட்சமாக 65 தவறு தான் செய்ய முடியும் என்ற அணுகு முறையோடு நாம் ஒரு முன்முயற்சியினை எடுத்தோம்

முன் முயற்சி ஆனது தமிழகத்திலேயே முதல் முறையாக டெய்லி முதன்மை தேர்வு என்ற ஒரு முயற்சியினை அறிவித்து ஒரு நாளுக்கு ஒரு தலைப்பு அந்த தலைப்புகளில் இருந்து டிஎன்பிஎஸ்சி கேட்கப்படும் மூன்று வகையான வினாக்கள் கேட்கப்படும் அப்படி ஒரு தலைப்பில் இருந்து நீங்கள் தயார் செய்யும் அந்த மூன்று வினாக்கள் டிஎன்பிஎஸ்சி தேர்வினில் கண்டிப்பாக ஒரு வினா அமைந்தே தீரும் என்ற அடிப்படையில் 100% அறிவியல் முனைப்போடு இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தினோம்

டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ள வினாத்தாளையும் நமது தேர்வு திட்டத்தில் நாம் கேட்ட வினா குறிப்புகளையும் மாணவர்களுக்கு முன்பே நாம் வலைதளத்தில் பகிர்ந்துள்ளோம். மாணவர்களும்

தேர்வினை முடித்துவிட்டு நாம் பயிற்சி செய்த அதே கேள்விகள் வந்தது என நமக்கு தெரிவித்து இருந்தனர்

கடந்த முதன்மைத் தேர்வில் டிஎன்பிஎஸ்சி சொல்லாமல் விட்ட இடத்தினையும் நமது பயிற்சி மையமானது சரியாக கனித்து மாணவர்களுக்கு அதனை பயிற்சி அளித்தது டிஎன்பிஎஸ்சி தேர்வு ஆணையம் ஒவ்வொரு விரிந்துரைக்கும் பகுதிக்கும் எத்தனை வரிகள் கொண்ட விடைத்தாள் தருவோம் என்று கடந்த முறை சொல்லவில்லை டிஎன்பிஎஸ்சி சொல்லாமல் விட்ட அப்பகுதியினையும் மாணவர்களுக்கு நாம் 100% அறிவியல் அணுகு முறையோடு பயிற்சி இணை அளித்தோம் எத்தனை வரிகள் என்று டி என் பி எஸ் சி சொல்லாத பட்சத்திலும் இத்தனை வரிகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது ஆக மாணவர்கள் ஆகிய நீங்கள் நம் பயிற்சி மையம் அளிக்கும் விடைத்தாளினில் உள்ள விடை வரிகளுக்கு நீங்கள் பயிற்சி அளித்து முயற்சி செய்து வந்தால் டிஎன்பிஎஸ்சியால் தரப்படும் விடைத்தாளில்
நீங்கள் எளிமையாக மார்க்கினை பெற முடியும் என்று சொன்னோம் அவ்வாறே மாணவர்களும் தாங்கள் பெற்ற பயிற்சியினை தேர்வு அறையில் சரியாக நடைமுறைப்படுத்தினர்

நம்முடைய இந்த அணுகுமுறை இந்த ஆண்டு வரவிருக்கின்ற முதல் நிலை தேர்வுகளிலும் உலகிலேயே அதிக மாணவர்கள் எழுதும் தேர்வாக அறியப்படுகின்ற தொகுதி போர் தேர்விலும் நாம் பயிற்சியினை அழிக்க உள்ளோம். ஒரு தேர்விற்கு ஒரு மாணவன் எந்த அணுகுமுறையில் தயார் செய்ய வேண்டும் எந்த அணுகுமுறையில் தயார் செய்யும் பட்சத்தில் மாணவனுக்கு தேர்வில் வெற்றி கொள்ள எளிமையாக இருக்கும் என்று பல்வேறு தரப்பட்ட தலைப்புகளில் உங்களுக்கு இந்த கையேட்டின் மூலம் டிஎன்பிஎஸ்சி நடத்தும் தேர்வினை பற்றிய ஒரு புரிதலையும் ஆழ்ந்த தெளிவினையும் ஏற்படுத்த முயற்சி செய்தோம். உங்கள் முயற்சி உங்களை வெற்றி பெற செய்வதை எங்களின் இலக்கு நீங்கள் அரசு அதி ிரியா அதிகாரியாக வலம் வருவது எங்களின் நோக்கம் நீங்கள் நாளை சமூகத்துக்கு செய்யும் அரசு பணியே